Find us on facebook/tamilmirror Follow us on tamilmirror epaper/tamilmirror.lk

www.tamilmirror.lk

# தமிழ்Mirror

வெள்ளிக்கிழமை ஏப்ரல் 22, 2022 | ஒளி: 07 கதிர்: 286 | பக்கம்:08 | வடக்கு,கிழக்கு | FREE

## இந்தியாவும் சீனாவும் இலங்கைக்கு உதவி

**500 மில். தருகிறது இந்தியா: உதவுகிறது சீனா**

எரிபொருள் கொள்வனவுக்காக இந்தியா உதவவுள்ளதாகவும், அவசர மனிதநேய உதவிகளை பெற்றுக்கொடுக்க சீனா தயாராக உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.



தொடர்ச்சி P12

### போராட்டத்தில் குதித்த
## பொலிஸ் அதிகாரி இடைநிறுத்தம்

அரசாங்கம் மற்றும் ஜனாதிபதிக்கு எதிராக காலி முகத்திடலில் இடம்பெற்று வரும் பொதுமக்கள் போராட்டத்தில் கலந்து கொண்ட பொலிஸ் அதிகாரி, பணியிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம், நேற்று (21) அறிவித்தது.



தொடர்ச்சி P12

## பிரபாகரனின் தீர்க்கதரிசனம் இன்று மெய்த்துள்ளது

பாக்கிகள், கொலைகள் என்றாவது ஒருநாள் சிங்கள மக்கள் மீது திரும்பும் என்று அன்று விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் தீர்க்கதரிசனமான வார்த்தைகள், இலங்கையில் தற்போது மெய்யாக்கப்பட்டு வருகின்றன என தமிழ்த் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறிதரன் சபையில் தெரிவித்தார்.

தொடர்ச்சி P12



### ஈஸ்டர் தாக்குதல் குறித்த உண்மை வெளியாகி விடுமென
# அரசாங்கம் அஞ்சுகிறதா?

**மைத்திரியை ஏன் அரசாங்கம் பாதுகாக்கிறது எனவும் பேராயர் கேள்வி**

அரசாங்கத்துக்கு பிரச்சினைகளை ஏற்படுத்தக்கூடிய உண்மைகள் மக்களுக்கு வெளிப்பட்டுவிடும் என்பதால், முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோ, முன்னாள் பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜயசுந்தர மற்றும் அரச புலனாய்வுப் பிரிவின் முன்னாள் தலைவர் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் நிலந்த ஜயவர்தன ஆகியோருக்கு அரசாங்கம் பயப்படுகிறதா என்ற கேள்விகள் எழுவதாக பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை கேள்வியெழுப்பினார்.

தொடர்ச்சி P12

## ஐ.எம்.எ.:ப்பின் நிதியுதவிக்கு ஆறுமாத காலம் செல்லும்

**ஜி.எல் தெரிவிப்பு: இந்தியாவிடம் 500 மில்லியன் டொலர்: பங்களாதேஷ் காலஅவகாசம்**

சர்வதேச நாணய நிதியத்துடன் இடம்பெறும் பேச்சுவார்த்தைகளில் சாதகமான பதில் கிடைக்கும் எனத் தாம் எதிர்பார்ப்பதாகவும், அவ்வாறு சர்வதேச நாணய நிதியம் வழங்கும் நிதியுதவி கிடைப்பதற்கு மேலும் ஆறுமாத காலம் செல்லும் எனவும் வெளிவிவகாரத்துறை அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்தார்.

தொடர்ச்சி P12

### ரம்புக்கனை விவகாரம்
## விசாரணைகளை தொடங்கியது சீ.ஐ.டி

**3 பொலிஸார் இடைநிறுத்தம்**

ரம்புக்கனையில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவம் தொடர்பாக பொலிஸ்மா அதிபரின் உத்தரவுக்கு அமைய குற்றப் புலனாய்வு திணைக்களத்தினர் (சீ.ஐ.டி) விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். விசாரணை குறித்த அறிக்கையை மூன்று நாள்களில் சமர்ப்பிக்குமாறு சீ.ஐ.டியின் பிரதி பொலிஸ்மா அதிபருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P12

## "ஈஸ்டர் தாக்குதல் சூத்திரதாரிகளை சட்டத்தின் முன்னிறுத்துவேன்" - சஜித்

உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பிரதான சூத்திரதாரி, அதனுடன் தொடர்புடையவர்கள் தொடர்பிலும் முறையான விசாரணைகளை நடத்தி, சம்பந்தப்பட்டவர்களை சட்டத்தின் முன் கொண்டுவரவும் அவர்களுக்கு உயர்ந்தபட்ச தண்டனையை பெற்றுக்கொடுக்கவும் நடவடிக்கை எடுப்போம் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, பேராயர் மெல்கம் ரஞ்சித் ஆண்டகைக்கு எழுத்துமூலம் உறுதியளித்துள்ளதாக தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P12



## மஹிந்தவுடன் தொடர்ந்தும் பயணிப்பதற்கு தீர்மானம்

பிரதமர் மஹிந்த ராஜபக்‌ஷவின் தலைமையில் அரசாங்கத்தை வலுவாகக் கொண்டுசெல்லும் முன்மொழிவொன்றை ஆளும் கட்சி உறுப்பினர்கள் குழு கூட்டத்தில் நேற்று (21) ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

தொடர்ச்சி P12

## நெருக்கடியைத் தீர்க்க விரிவான பேச்சு



முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை நேற்று (21) சந்தித்திருந்த இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங், இலங்கையின் அரசியல் மற்றும் பொருளாதார நெருக்கடியைத் தீர்ப்பது, அவரது முன்னோக்கு யோசனைகளை குறித்து கலந்துரையாடியதாகவும், இலங்கையின் எதிர்காலத்தை வடிவமைப்பதில் இலங்கை பெண் தலைவர்களின் அர்த்தமுள்ள பங்களிப்பை தாம் வரவேற்பதாகவும் தனது டுவிட்டர் பக்கத்தில் தெரிவித்துள்ளார்.



### எட்டு முன்மொழிவுகளுடன்
# 21 ஆவது திருத்தம் சபாநாயகரிடம் கையளிப்பு

**நிறைவேற்று ஜனாதிபதி முறைமை ஒழித்தல்** | **பாராளுமன்றமே ஜனாதிபதியை தேர்ந்தெடுக்கும்**

**25 க்குள் அமைச்சரவையை அடக்க வேண்டும்** | **பிரதி, இராஜாங்க அமைச்சுகளும் 25க்குள் அடக்கம்**

**அமைச்சரவை பாராளுமன்றுக்கு பொறுப்பு கூறும்** | **அமைச்சரவைக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை**

நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை நீக்குவது உட்பட எட்டு முன்மொழிவுகளுடன் கூடிய அரசியலமைப்பின் 21வது திருத்த சட்டமூலத்தை எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியினர் நேற்று (21) காலை சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவிடம் கையளித்தனர்.

முக்கியமாக தற்போது நடைமுறையில் உள்ள நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை ஒழிக்கப்பட வேண்டும் என்பதுடன், பாராளுமன்றமே ஜனாதிபதியை தேர்ந்தெடுக்க வேண்டும் என்றும் அமைச்சரவையானது பாராளுமன்றத்திற்கு தொடர்ச்சியாக பொறுப்புக்கூறும் விதமாக செயற்பட வேண்டும் என்றும் அமைச்சரவை பொறுப்புக்கூறலில் தவறினால் நம்பிக்கையில்லா பிரேரணை மூலமாக அமைச்சரவையை நீக்க முடியும்.

தொடர்ச்சி P12

## ஆதாரம் இருப்பின் வழக்கு தொடருங்கள்



எமது குடும்பத்தில் எவரும் முறையற்ற வகையில் உலகில் எங்காவது சொத்துகளை வைத்திருந்தால், உலகில் எந்த இடத்திலும் வழக்குத் தாக்கல் செய்யுங்கள்.

தொடர்ச்சி P12

## சபையில் ரிஷாட் ஆதங்கம்

**'நாசமாய் போவீர்கள்' என சாபம்**



ஈஸ்டர் தாக்குதலுக்கு இரண்டு பேருக்குத்தான் தொடர்பு இருப்பதாக பாதுகாப்பு செயலாளர் கூறியுள்ள போதிலும் ஆண்கள், பெண்கள் என 300 பேர் வரை சந்தேகத்தின் பேரில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். குற்றவாளிகளாக இருந்தால் தண்டியுங்கள் அல்லது விட்டுவிடுங்கள்.

இந்தச் சம்பவத்தை பயன்படுத்தி அரசியல் இருப்புக்காக இனியும் பயன்படுத்தக் கூடாது.

தொடர்ச்சி P12



## சபையில் ஒரு நிமிடம் மௌன அஞ்சலி

உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் கொல்லப்பட்டவர்களின் 3 ஆவது ஆண்டை நினைவுகூரும் வகையில், சபையில் ஒரு நிமிட மௌன அஞ்சலி செலுத்த வேண்டுமென பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியினரால் விடுக்கப்பட்ட கோரிக்கை, முதலில் சபாநாயகரால் நிராகரிக்கப்பட்டபோதும் பின்னர் ஏற்றுக்கொள்ளப்பட்டு ஒரு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

தொடர்ச்சி P12

## முகக்கவசம் அணிவது மீண்டும் கட்டாயம்

**மூன்று நாளைக்கு முந்தைய அறிவிப்பு கைவிடப்பட்டது**

பொது இடங்களில் முகக்கவசம் அணிவது மீண்டும் கட்டாயமாக்கப்பட்டுள்ளது என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அசேல குணவர்த்தன, நேற்று (21) அறிவித்தார். பாரிய போராட்டங்களில் கலந்துகொள்வதற்காக நாடளாவிய ரீதியில் பெரும் குழுக்கள் ஒன்று கூடி வருவதை கருத்திற்கொண்டே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

தொடர்ச்சி P12

## "துப்பாக்கிச்சூடு நடத்துமாறு மூவரே உத்தரவிட்டனர்"

ரம்புக்கனையில் இடம்பெற்ற மக்கள் போராட்டத்தின் மீது துப்பாக்கிச்சூடு நடத்துமாறு உத்தரவிட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சர் கே.பி. கீர்த்திரத்னவுக்கு, 3 அமைச்சர்களே உத்தரவிட்டனர் என பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் எம்.பியான நளின் பண்டார குற்றம்சாட்டினார். பாராளுமன்றம் நேற்று (21) வியாழக்கிழமை கூடிய நிலையிலேயே இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்த நளின் பண்டார எம்.பி மேலும் கூறுகையில்,

தொடர்ச்சி P12

### ரம்புக்கனை விவகாரம்
## பொலிஸ்மா அதிபருக்கு அழைப்பாணை

ரம்புக்கனையில் செவ்வாய்கிழமை (19) இடம்பெற்ற சம்பவம் குறித்து விசாரணை நடத்துவதற்காக பொலிஸ்மா அதிபர் சந்தன விக்கிரமரத்ன உட்பட சிரேஷ்ட பொலிஸ் உத்தியோகத்தர்கள் பலருக்கு, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் இன்று (22) ஆஜராகுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P12

## பிரபாகரனின்...

பாராளுமன்றத்தில் நேற்று (21) வியாழக்கிழமை நடைபெற்ற உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இதனை தெரிவித்தார்.அதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையில் இரத்தக் கறைகளால் எழுதிய வரலாறுகளில் ஏப்ரல் 21 தாக்குதலும் உள்ளடங்கின்றது. சஹ்ரான் என்ற தனிநபரை மையமாகக் கொண்டு இந்த விடயம் கூறப்படுகின்றது. ஆனால் இதற்கு பின்னால் பெரிய அரசியல் பின்புலங்களும், அரசியல் நடவடிக்கைகளும் உள்ளதாக கூறப்படுகின்றது. பல இடங்களில் மக்கள் கொல்லப்பட்டனர். இவர்களில் 90 வீதமானவர்கள் தமிழர்களே. யுத்தத்திலும் தமிழர்களே கொல்லப்பட்டனர்.குறித்த தாக்குதலை நடத்தியது யார்? அதன் சூத்திரதாரிகள் யார்? இதன் பின்னணி என்ன? என்பதனை இராணுவ மற்றும் பொலிஸ் பலம் இருந்தும் இன்னும் நிரூபிக்க முடியவில்லை.

ரம்புக்கனயில் சிங்கள இளைஞன் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார். அவருக்கு எமது அனுதாபத்தை தெரிவிக்கின்றோம். பல போராட்டங்களை மக்கள் முன்னெடுக்கின்றனர். இந்த நாட்டில் ராஜபக்ஷ குடும்பத்தை வெளியேறுங்கள் என்று மக்கள் பேராடுகின்றனர். அந்த நிலையிலேயே ரம்புக்கனயில் நடந்த போராட்டத்தில் துப்பாக்கி சூடு நடத்தியுள்ளனர். அதில் கொல்லப்பட்டவருக்கு நாங்கள் எங்களின் ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக்கொள்கின்றோம். நாடு இப்போது கொதிநிலையில் உள்ளது. நீதியான தலைமைத்துவத்தில் இந்த நாடு இல்லை. உலகம் பார்த்து வெட்கப்படும் அளவிற்கு 2009 இல் முள்ளிவாய்க்காலில் நடந்துள்ளது. நாட்டில் நடந்த படுகொலைகளுக்கு எந்தவொரு தலைவரும் வருத்தம் தெரிவித்ததாக வரலாறுகள் இல்லை. நாங்கள் போராடும் போது நீங்கள் மௌனம் காக்க வைக்கப்பட்டீர்கள். இன்று அவர்கள் அதனை புரிந்துகொள்ளும் காலம் வந்துள்ளன.

## விசாரணைகளை...

இதேவேளை, ரம்புக்கனை துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்த சமிந்த லக்ஷானின் இறுதிக் கிரியைகள், நாரம்பெத்த ஹிரிவதுன்ன பிரதேசத்தில் இடம்பெறவுள்ளது. இறுதிக்கிரியை நிறைவடையும் வரை சட்டம் ஒழுங்கை நிலைநிறுத்துவதற்காக ரம்புக்கனையில் முப்படையினர் உதவி கோரப்பட்டுள்ளதாகவும் பொலிஸ்மா அதிபரின் வேண்டுகோளுக்கு அமையவே முப்படையினர் அழைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, ரம்புக்கனை பொலிஸ் பிரிவிற்கு பொறுப்பான பொலிஸ் அத்தியட்சகர் மற்றும் கேகாலை பொலிஸ் பிரிவிற்கு பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஆகியோர் இவ்வாறு இடமாற்றப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடக பிரிவு குறிப்பிட்டுள்ளது.

## மஹிந்தவுடன் தொடர்ந்தும்...

நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமைக்கு மத்தியில் அரசாங்கம் நிலைமைகளை வலுவாக எதிர்கொள்ள வேண்டும் எனவும், அதற்கு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையில்அரசாங்கத்தை தொடர்ந்து முன்னெடுத்து செல்ல வேண்டும் எனவும் பாராளுமன்ற உறுப்பினர்சஹன் பிரதீப் முன்மொழிந்திருந்தார். அந்த முன்மொழிவிற்கு அனைத்து உறுப்பினர்களும் கைகளை உயர்த்தி ஏகமனதாக ஆதரித்திருந்தனர்.

எதிர்வரும் வாரங்களில் மக்களுக்கு தேவையான துரித நிவாரணங்களை பெற்றுக் கொடுப்பதற்கு முன்னெடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் தொடர்பில் விடயத்திற்கு பொறுப்பான அமைச்சர்களினால் தெளிவுபடுத்தப்பட்டதுடன் ஒரு சில நாட்களுக்கும் அத்தியாவசிய பொருட்களை பெற்றுக்கொள்ளும் வேலைத்திட்டங்களை முன்னெடுக்கவும் பிரதமர் பணித்துள்ளார்.

## ஆதாரம் இருப்பின்...

நாங்கள் அவற்றுக்கு முகம்கொடுக்க தயாராக இருக்கின்றோம் என முன்னாள் அமைச்சர் நாமல் ராஜபக்ஷ சபையில் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று (21) வியாழக்கிழமை விசேட கூற்றை முன்வைத்து உரையாற்றும் போதே நாமல் ராஜபக்ஷ இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில், நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை இல்லாதொழிப்பது தொடர்பில் யோசனை கொண்டு வந்துள்ளமை தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் கூறினார். அது மிகவும் சிறந்த விடயமே. ஜனாதிபதியும் தனது கொள்கைப் பிரகடனத்துக்கு அமைய புதிய அரசியலமைப்பு திருத்தம் தொடர்பில் கலந்துரையாடல்களை முன்னெடுத்துள்ளார். இதற்கு முன்னர் பல தலைவர்கள் இதுபற்றி கதைத்ததுடன் அந்த யோசனைகளை பாராளுமன்றத்திற்கு கொண்டு வந்தனர்.

ஆனால் எந்த கட்சியும் அதனை எதிர்கால நோக்காக பார்க்கவில்லை.

இதேவேளை இந்த பாராளுமன்றத்தில் கடந்த காலங்களில் என் மீது பல்வேறு குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டன. 2015 ஆண்டுக்கு பின்னர் ஊழல் ஒழிப்பு விசாரணை குழுக்களில் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுகள் தொடர்பிலேயே அடிக்கடி இந்த பாராளுமன்றத்தில் முன்வைத்து வந்தனர்.

## சபையில் ஒரு...

பாராளுமன்றம் நேற்று (21) வியாழக்கிழமை காலை 10 மணிக்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் கூடியது. சுயாதீன எம்.பி.யான நிமல் லான்சா,உயிர்த்த ஞாயிறு தாக்குதல் நடந்து இன்றுடன் (நேற்றுடன் )மூன்று வருடங்கள் ஆகின்றன. அதில் உயிரிழந்தவர்களுக்கு எனது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிக்கின்றேன் என்றார்.

இதனையடுத்து எழுந்த ஐக்கிய மக்கள் சக்தி ஹெக்டர் ஹப்புகாமி எம்.பி. ,இந்த சபையில் இரண்டு நிமிட மௌன அஞ்சலியை செலுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

இதனையடுத்து எழுந்த சஜித் பிரேமதாஸ இரண்டு நிமிடங்கள் இல்லாவிடின் ஒரு நிமிடமாவது மௌன அஞ்சலி செலுத்தப்பட வேண்டும் சபாநாயகர் உள்ளிட்ட அரச தரப்பினரும் எழுந்து நின்று ஒரு நிமிட மௌன அஞ்சலி செலுத்தினர்.

# அரசாங்கம் அஞ்சுகிறதா?

மேலும், தாக்குதல் குறித்து, சட்டமா அதிபரும் அரசாங்கமும் நடவடிக்கை எடுக்கத் தவறியமை கேள்விக்குரியது எனவும் அரசாங்கம் ஏன் முன்னாள் ஜனாதிபதியை பாதுகாக்கின்றது என்பது கவலையளிப்பதாகவும் தெரிவித்தார்.

ஈஸ்டர் தாக்குதல் சம்பவத்தில் உயிரிழந்தவர்களை நினைவுகூரும் வகையில் கொச்சிக்கடை புனித அந்தோனியார் ஆலயத்தில் நேற்று (21) நடைபெற்ற ஆராதனையின் பின்னர் உரையாற்றியபோதே மேற்குறிப்பிட்ட விடயத்தை அவர் தெரிவித்தார்.

2019 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட ஒரு வேட்பாளரின் வெற்றியை உறுதிப்படுத்தும் நோக்கில், தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வாக்குறுதிகளை முன்வைத்து நாட்டில் அமைதியின்மை உருவாக்கப்பட்டதாகத் தெரிவித்த அவர், இனங்களுக்கிடையில் மோதல்களை உருவாக்குவதும் இந்த சூழ்ச்சியின் ஒரு பகுதியாகும் என்று குறிப்பிட்டார்.

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பில் ஆராயும் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கை இவ்விடயத்தை வெளிப்படுத்தியுள்ளதாக சுட்டி க்காட்டினார். குறித்த தாக்குதல், 2019ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலை மையப்படுத்தி, தேசிய பாதுகாப்பு மீது அமைதியின்மை உருவாக்கப்பட்டு, மக்களிடையே அச்சத்தை ஏற்படுத்தி, மக்களை ஒருவருக்கொருவர் எதிராக நிறுத்தியதாக அறிக்கையின் சுருக்கம் தெரிவிக்கிறது என கூறினார்.

முன்னாள் ஜனாதிபதி, புலனாய்வுப் பிரிவுகள் மற்றும் பொலிஸாருக்கு இவ்விடயம் முன்னரே தெரிந்திருந்தும் வரவிருக்கும் தாக்குதல்கள் பற்றிய விவரங்களை மறைத்து அதன் மூலம் மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தத் தவறியதாகவும் அவர் குறிப்பிட்டார். வனாத்தவில்லுவ பிரதேசத்தில் கண்டுபிடிக்கப்பட்ட வெடிபொருட்கள் தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அறிந்திருந்தும் பாதுகாப்புச் சபையிடம் விசாரணைகளை மேற்கொள்ளத் தவறியுள்ளதாகவும் சுட்டிக்காட்டினார்.

சஹ்ரான் ஹாசிம் மற்றும் மதவாதிகள் குழுவைக் கைது செய்யுமாறு சில அதிகாரிகள் விடுத்த கோரிக்கைகள், முன்னாள் ஜனாதிபதியால் கவனிக்கப்படாமல் போனதை நினைவுகூர்ந்த அவர், இதுவும் தாக்குதல்களுக்குக் காரணம் என்றும் முன்னாள் ஜனாதிபதி தனது கடமைகளை புறக்கணித்ததாகவும் கடமையை நிறைவேற்றத் தவறியதாகவும் கார்டினல் கூறினார்.

தாக்குதல் குறித்து, சட்டமா அதிபரும் அரசாங்கமும் நடவடிக்கை எடுக்கத் தவறியமை கேள்விக்குரியது எனவும் அரசாங்கம் ஏன் முன்னாள் ஜனாதிபதியை பாதுகாக்கின்றது என்பது கவலையளிப்பதாகவும் தெரிவித்தார்.

ஈஸ்டர் ஞாயிறு குண்டுத் தாக்குதல்கள் தொடர்பான விசாரணைகள் மேற்கொள்ளப்படும் செயல்முறையையும் கர்தினால் கண்டித்தார்.

ஈஸ்டர் தாக்குதலுக்கு காரணமானவர்களை சட்டத்தின் முன் கொண்டு வருவேன் என ஜனாதிபதி தேர்தலின் போது மேடைகளில் இறங்கிய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்ததையும் நினைவு கூர்ந்தார். இன்று அவர் தனது வாக்குறுதிகளை நிறைவேற்றத் தவறிவிட்டதாகவும், ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையில் வெளிப்படுத்தப்பட்டுள்ள உண்மைகளை மறைத்து வருவதாகவும் தெரிவித்தார்.

## சபையில் ரிஷாட்...

அவ்வாறு செய்தால் நீங்கள் நாசமாய் போவீர்கள் என இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாட் பதியுதீன் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில்,

ஈஸ்டர் தாக்குதலை பிரசாரம் செய்தும், முஸ்லிம் தலைவர்களாகிய நாங்கள் பின்பற்றும் மதம் தொடர்பான பொய் பிரசாரம் செய்து சிங்கள மக்களை ஏமாற்றியே இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்தது என்பது இன்று முழு உலகுக்கும் தெரிந்த விடயம். இந்த தாக்குதலை தொடர்ந்து கத்தோலிக்க -முஸ்லிம் மக்களிடையே மோதல் ஏற்படாதிருக்க பேராயர் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை எடுத்த நடவடிக்கையை நன்றியுடன் நினைவு கூருகிறேன்.

அத்துடன் இந்த தாக்குதலுக்கு இரண்டு பேருக்குத்தான் தொடர்பு இருப்பதாக பாதுகாப்பு செயலாளர் கூறினார். ஆனால் ஆண்கள் பெண்கள் என 300 பேர் வரை சந்தேகத்தின் பேரில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு எதிராக குற்றச்சாட்டு இருந்தால் அதுதொடர்பில் நீதிமன்றில் வழக்கு தொடுக்கவேண்டும். அல்லது அவர்களை விடுவிக்கவேண்டும்.இந்த சம்பவத்தை பயன்படுத்தி அரசியல் இருப்புக்காக இனியும் பயன்படுத்தக் கூடாது. அவ்வாறு செய்தால் நீங்கள் நாசமாய் போவீர்கள்.தாக்குதலுடன் தொடர்புள்ள உண்மையான குற்றவாளிகளை தண்டிக்க வேண்டும். அப்பாவிகளை விடுவிக்கவேண்டும்.

பாதிக்கப்பட்ட கத்தோலிக்க மற்றும் முஸ்லிம் சமூகங்கள் அழுகின்றன. பள்ளிகள் கடைகள் தாக்கப்பட்டன. பௌஸ்தீன் என்பவர் வீதியில் கொலை செய்யப்பட்டார். டொக்டர் சாபியை அநியாயமாக விமர்சித்து முஸ்லிம் டொக்டர்கள் குறித்து சந்தேகமாக பார்க்கும் நிலையை ஏற்படுத்தினார்கள். அஸாத் சாலியை கைது செய்தீர்கள். அவர் விடுவிக்கப்பட்டார். நோன்பு நோற்க தயாராக இருக்கையில் என்னை இரவோடு இரவாக கைது செய்து 6 மாதம் பயங்கரவாத தடுப்புச்சட்டத்தின் கீழ் தடுத்து வைத்தீர்கள். தொழுகைக்கு ,நித்திரைகொள்ள வசதி தரவில்லை. எனது அறையை மூடி வைத்தார்கள். 12 மணிநேரம் மூடி வைத்ததால் தொழ முடியாத நிலை ஏற்பட்டது. அத்துடன் நான் சிறையில் இருக்கும் போது முஷரப்.

## முகக்கவசம்...

பொதுப் போக்குவரத்து மற்றும் உள்ளக இடங்களைத் தவிர்த்து, பொது இடங்களில் முகக்கவசம் அணிவது கட்டாயம் இல்லை என்று புதிதாக நியமிக்கப்பட்ட சுகாதார அமைச்சரான பேராசிரியர் சன்ன ஜயசுமன, கடந்த திங்கட்கிழமையன்று (18) அறிவித்திருந்தார்.

எனினும், கொரோனா வைரஸ் தொற்றுநோய் இன்னும் முடிவுக்கு வராத நிலையில் எடுக்கப்பட்ட இந்த தீர்மானம், புத்திஜீவிகள் பலரால் விமர்சிக்கப்பட்டதையடுத்து, குறித்த தீர்மானத்தை மீள்பரிசீலனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என சுகாதார அமைச்சர், பாராளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் (20) தெரிவித்திருந்தார். இந்நிலையிலேயே, முகக்கவசம் அணிவதைக் கட்டாயமாக்கும் சட்டம் தொடர்ந்து அமுலில் இருக்கும் என்றும் சட்டத்தை நீக்குவதற்கு எடுத்த தீர்மானத்தை இடைநிறுத்துவதற்கு தீர்மானித்துள்ளதாகவும் அமைச்சு அறிவித்துள்ளது.

## பொலிஸ்மா அதிபருக்கு...

ஆணைக்குழுவின் தலைவர் நீதியரசர் (ஓய்வுபெற்ற) ரோஹினி மாரசிங்க வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே மேற்குறிப்பிட்ட விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளதுடன், இன்று (22) முற்பகல் 11 மணிக்கு ஆணைக்குழுவின் ஆஜராகுமாறு அழைக்கப்பட்டுள்ளனர்.

பொலிஸ்மா அதிபர், மத்திய மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர், மத்திய மாகாண பிரதிப் பொலிஸ்மா அதிபர், கேகாலை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர், கேகாலை மற்றும் ரம்புக்கனை பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. ரம்புக்கனை துப்பாக்கிச் சூடு மற்றும் போராட்டக்காரர்களுக்கும் பொலிஸாருக்கும் இடையில் ஏற்பட்ட அமைதியின்மை குறித்து விசாரணை நடத்துவதற்கு மனித உரிமைகள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

விசாரணைகளை மேற்கொள்வதற்காக இரண்டு பணிப்பாளர்கள், பிரதிப் பணிப்பாளர், சட்ட உத்தியோகத்தர் மற்றும் ஒரு மனித உரிமை அதிகாரி ஆகியோரைக் கொண்ட குழுவொன்றை ஆணைக்குழு ரம்புக்கனைக்கு அனுப்பியுள்ளது.

சட்ட வைத்திய அதிகாரி மற்றும் காயமடைந்த ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு சிகிச்சையளித்த வைத்தியசாலை ஊழியர்களிடம் தகவல்களைப் பெறவுள்ளதாகவும் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

## இந்தியாவும்...

எரிபொருள் கொள்வனவுக்காக இந்தியாவிடமிருந்து மேலும் 500 மில்லியன் அமெரிக்க டொலர்கள் கிடைக்கவுள்ளதாக வெளிவிவகார அமைச்சர், பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ், நேற்று (21) தெரிவித்தார். சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பு 6 மாதங்களுக்குள் பகுதி பகுதியாக கிடைக்கும் எனவும் அமைச்சர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார். அத்துடன், பங்களாதேஷிடம் பெற்றுக்கொள்ளப்பட்ட 450 மில்லியன் அமெரிக்க டொலரை மீள செலுத்தும் நடவடிக்கை பிற்போடப்பட்டுள்ளதாகவும் 2.5 பில்லியன் அமெரிக்க டொலர் நிதி உதவியை ஏற்கெனவே இந்தியா வழங்கியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

சீனாவுடன் தொடர்ந்தும் கலந்துரையாடல் இடம்பெறுவதாகவும் ஜப்பான், ஐக்கிய அரபு அமீரகம், ஓமான் மற்றும் கட்டார் ஆகிய நாடுகளின் ஒத்துழைப்புகளை பெறுவது குறித்து கவனம் செலுத்தப்படவதாகவும் தெரிவித்தார். இதேவேளை, இலங்கை தற்போது எதிர்நோக்கியுள்ள நெருக்கடி நிலையை சமாளிப்பதற்கு தேவையான அவசர மனிதநேய உதவிகளை பெற்றுக்கொடுக்க சீனா தயாராக உள்ளதாக இலங்கைக்கான சீனத் தூதரகம் தெரிவித்துள்ளது.

## பொலிஸ் அதிகாரி...

கடந்த ஏப்ரல் 14 ஆம் திகதி காலி முகத்திடலில் இடம்பெற்று வரும் மக்கள் போராட்டத்தில் விசேட கடமைகளுக்காக நியமிக்கப்பட்டிருந்த குட்டிகல பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் அதிகாரி, சீருடையுடன் போராட்டத்தில் கலந்துகொண்டார்.

பின்னர் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட அவர், கோட்டை நீதவான் நீதிமன்றத்தினால் பிணையில் விடுவிக்கப்பட்டதுடன், விசாரணைக்கு பின்னர் அவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என முன்னர் தெரிவிக்கப்பட்டிருந்தது. இந்நிலையில், ஏப்ரல் 14 ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் குறித்த பொலிஸ் அதிகாரி, சேவையில் இருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## ஐ.எம்.எ:ப்பின்...

சர்வதேச நாணய நிதியத்தின் நிதியுதவி கிடைக்கும் வரை மக்களுக்கான அத்தியாவசிய பொருட்களை பெற்றுக்கொள்ள தேவையான நிதியை தேடிக்கொள்ள வேண்டிய நெருக்கடி நிலையொன்று உருவாகியுள்ளது எனவும் தெரிவித்துள்ளார்.

மேலும் 500 மில்லியன் டொலர் நிதியுதவியை இந்தியாவிடம் இருந்து பெற்றுக்கொள்வதற்கான பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அதேபோல் பங்களாதேஷிடம் இருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட 450 மில்லியன் டொலர் கடனை திரும்ப செலுத்த முடியாத கடின நிலைமை உள்ளமையினால் அவர்களுடனும் பேச்சுவார்த்தை நடத்தியதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## ஈஸ்டர் தாக்குதல்...

அத்துடன் தமது அரசாங்கத்தின் கீழ், இந்த சம்பவத்துடன் தொடர்புடைய எவரையும் பாதுகாக்க நடவடிக்கை எடுக்க மாட்டோம் என்றும் அவர் உறுதியளித்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் இடம்பெற்று மூன்று வருடங்கள் பூர்த்தியாகும் நிலையில், அது தொடர்பில் பாராளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை விசேட உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் இதனை தெரிவித்துள்ளார்.

தாக்குதல் தொடர்பான ஆணைக்குழுவின் அறிக்கை இன்னும் பொதுமக்களுக்காக வெளியிடப்படவில்லை. இதனால் அந்த அறிக்கையின் அனைத்து தொகுதிகளையும் பாராளுமன்ற இணையத்தளத்தில் உள்ளடக்குங்கள். அத்துடன் முன்னாள் சட்டமா அதிபர் தப்புல டி லிவேரோ தாக்குதலின் பின்னால் பெரும் சூழ்ச்சிகள் உள்ளதாக கூறியிருந்தார். அதன்படி அது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. உண்மைகளை வெளியிட வேண்டிய பொறுப்பு அரசாங்கத்திற்கு உள்ளது என்றார்.

## “துப்பாக்கிச்சூடு...

ரம்புக்கணையில் இடம்பெற்ற மக்கள் போராட்டத் தின் மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கி பிரயோகத்தில் 3 ஆயுதங்களின் ஊடாக 90 ரவைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. போராட்டத்திற்கு முதல் நாள் இடம்பெற்ற சிரேஷ்ட பொலிஸ்மா அதிபர் தலைமையிலான கூட்டத்தின் போது போராட்டத்தில் ஈடுபடுபவர்களை கைது செய்ய வேண்டாம் என்றே தீர்மானிக்கப்பட்டிருந்தது.

அப்படியிருக்கும் போது மக்கள் போராட்டத்தின் மீது எவ்வாறு துப்பாக்கி சூடு நடத்தப்பட்டது? மக்கள் போராட்டத்தின் மீது துப்பாக்கி சூடு நடத்துமாறு சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சர் கே.பி.கீர்த்திரத்ன என்பவரே உத்தரவிட்டுள்ளார்.அவருக்கு துப்பாக்கிச்சூடு நடத்தும் உத்தரவை வழங்குமாறு உத்தரவிட்டது பொலிஸ்மா அதிபரோ அல்லது சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர்களோ அல்ல. அமைச்சர்கள் மற்றும் இராஜாங்க அமைச்சர்கள் மூவரே துப்பாக்கிச்சூடு நடத்தும் உத்தரவை பிறப்பிக்குமாறு உத்தரவிட்டுள்ளனர். இந்த குற்றச்சாட்டை நான் மிகவும் பொறுப்புடன் முன்வைக்கின்றேன் என்றார்.

## 21 ஆவது...

அமைச்சரவை அமைச்சர்களின் அதிகபட்ச எண்ணிக்கையானது 25ஆக இருக்க வேண்டும். அமைச்சரவை அல்லாத மற்றும் இராஜாங்க அமைச்சர்களின் எண்ணிக்கையும் 25ஆகவே அமைய வேண்டும், தேசிய அரசாங்கம் அமையும் பட்சத்திலும் அமைச்சரவை எண்ணிக்கையில் மாற்றம் ஏற்படக்கூடாது.

ஊழல் மோசடிகளை தடுக்கும் கடுமையான சரத்துக்களை உள்வாங்க வேண்டும். அத்துடன் அரசியலமைப்பு சபை மற்றும் சுயாதீன ஆணைக்குழுக்களை பலப்படுத்துவதுடன்,

கணக்காய்வு மற்றும் நிதி ஆணைக்குழு என்பவற்றையும் நிறுவுதல் அவசியமாகவும். தேசிய பாதுகாப்பு சபையை அரசியல் அமைப்பு அங்கீகாரத்துக்கு உற்படுத்தப்படல் வேண்டும்.



## எரிபொருள் விலையை அதிகரிக்க
# வொசிங்டன் அனுமதி

எரிபொருள் விலையை அதிகரிப்பதற்கு முன்னர் எடுத்திருந்த தீர்மானத்தை செயற்படுத்துவதற்காக நிதி அமைச்சர் அலி சப்ரியிடம் வொசிங்டனில் இருந்து அனுமதியை பெற்றுக்கொண்டோம் என சபை முதல்வரான அமைச்சர் தினேஸ் குணவர்தன தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று (3) வியாழக்கிழமை எதிர்க்கட்சியினரின் கேள்விக்கு பதில் தெரிவிக்கும் போதே அவர் இதனை கூறினார்.

நிதி அமைச்சர் இலங்கையின் நிதி விடயம் தொடர்பான வேலைத்திட்டமொன்றில் கலந்துகொண்டுள்ளார். இந்நிலையில் பெட்ரோலிய அமைச்சர் அவருடன் கலந்துரையாடியுள்ளார் என்றார். பெட்ரோலிய வளத்துறை அமைச்சர் காஞ்சன விஜேசேகர கூறுகையில், இந்த விலை அதிகரிக்கப்பட முன்னர், ஜனாதிபதியின் அனுமதி பெற்றுக்கொள்ளப்பட்டது வெளிநாடு சென்றுள்ள அமைச்சருக்கும், செயலாளருக்கும் பின்னர் அறிவித்து அனுமதி பெற்றுக்கொ-ள்ளப்பட்டுள்ளது. இதற்கான தொலைபேசி கலந்துரையாடல் ஆதாரங்களும் உள்ளன. ஜனாதிபதியிடமும் நிதி அமைச்சரிடமும் அனுமதி பெற்றே செய்யப்பட்டுள்ளது என்றார்.

நிதி அமைச்சர் இல்லாவிட்டால் ஜனாதிபதிக்கு அதிகாரம் உள்ளது. நிதி அமைச்சருக்கு அறிவிக்குமாறு ஜனாதிபதி கூறியுள்ளார். செயலாளருக்கு அது தொடர்பான ஆவனங்களை தயாரிக்குமாறு கூறப்பட்டுள்ளது. இதில் சந்தேகங்கள் இருந்தால் நீதிமன்றத்தில் இதனை சவாலுக்கு உட்படுத்துங்கள் இதில் எந்தப் பிரச்சனையும் கிடையாது என்றார்.



## தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் ஏற்பாட்டில்
# ரணிலுக்கும் மைத்திரிக்கும் பிறந்த குழந்தையே ஈஸ்டர் தாக்குதல்கள்

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் ஏற்பாட்டில் மைத்திரிக்கும் ரணிலுக்கும் இடையே நடைபெற்ற திருமணத்தில் பிறந்த குழந்தையே உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் என முன்னாள் அமைச்சரும் அரச தரப்பு எம்.பி.யுமான ரோஹித அபேகுணவர்தன சபையில் குற்றம்சாட்டினார்.



பாராளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு குற்றம்சாட்டிய அவர் மேலும் கூறுகையில்,

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கடந்த 19ஆம் திகதி சபையில் உரையாற்றிய போது ஆர்ப்பாட்டக்காரர்களை ஊக்குவித்து போராட்டங்களை தூண்டிவிடுவது போன்ற கருத்துக்களையே முன்வைத்தார். அதன் மூலம் அவர்களது அரசியல் நோக்கம் தெளிவாகிறது. பெரும்பான்மையை காண்பித்து ஆட்சிக்கு வர முதுகெலும்பில்லாத எதிர்க்கட்சியினர் எத்தகைய அழிவுகளுக்கு துணைபோயாவது ஆட்சியை கைப்பற்ற வேண்டும் என்ற நோக்கத்திலேயே செயற்படுகின்றனர். ஆசனங்கள் வெற்றிடமாகும்வரை காத்துக் கொண்டிருப்பது வெட்கக்கேடானது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கு எமது அரசாங்கமே பொறுப்புக்கூற வேண்டும் என எதிர்க்கட்சியினர் தெரிவித்து வருகின்றனர். 2019ஆம் ஆண்டு தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் ஏற்பாட்டில் மைத்திரிக்கும் ரணிலுக்கும் இடையே நடைபெற்ற திருமணத்தில் பிறந்த குழந்தையே உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குண்டுகளாகும். அந்த அரசாங்கத்தினர் நாட்டின் புலனாய்வுப் பிரிவினரதும் படையினரதும் முதுகெலும்புகளை உடைத்தனர். அதன் விளைவே சஹ்ரானின் குண்டுவெடிப்புகளாகும். இப்போது எமது அரசாங்கத்தின் மீது கைநீட்டுகின்றனர். எனினும் நாட்டு மக்கள் உண்மை நிலையை அறிவர் என்றார்.



# கறுப்பு உடையில் எதிர்க்கட்சியினர்

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் நடைபெற்று 3 ஆண்டுகள் நேற்று (21)நிறைவடைந்தமையை நினைவு கூர்ந்தும் அதில் கொல்லப்பட்ட மக்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையிலும் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் அனைவரும் கறுப்பு உடைகளில் சபைக்கு வந்திருந்த நிலையில் அரச தரப்புக்கும் எதிர்க்கட்சியினருக்குமிடையில் அது தொடர்பில் தர்க்கம் ஏற்பட்டது.

பாராளுமன்றம் நேற்று (21) வியாழக்கிழமை காலை 10 மணிக்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் கூடிய போதே ஐக்கிய மக்கள் சக்தி எம்.பிக்கள் அனைவரும் கறுப்பு ஆடைகளில் சபைக்கு வந்திருந்தனர்.

இது தொடர்பில் கருத்து தெரிவித்த அரச தரப்பு பிரதம கொறடாவும் பொதுமக்கள் பாதுகாப்பது அமைச்சருமான பிரசன்ன ரணதுங்க, “உயிர்த்த ஞாயிறு தாக்குதல் உங்கள் ஆட்சியில்தான் நடந்தது. எனவே இன்று மட்டுமல்ல தினமும் நீங்கள் கறுப்பு ஆடைகளையே அணிந்திருக்க வேண்டும். இன்று மட்டும் அணிந்து வந்து பொய் வேஷம் போடாதீர்கள்” என்றார். இதனை கடுமையாக எதிர்த்த எதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாஸ, “நாங்கள் எந்த ஆடையை அணிய வேண்டும் என்பதனை நீங்கள் எப்படித் தீர்மானிப்பது? அப்படித் தீர்மானித்தால் அது மிகப்பெரும் மனித உரிமை மீறல். இப்போதாவது நீங்கள் எந்தளவுக்கு மனித உரிமைகளை மீறுகின்றீர்கள் என்பதனை புரிந்து கொள்ளுங்கள்” என்றார்.

## சஹ்ரானின் கூட்டாளிகள் விடுதலை
# தேநீர் அருந்தியவர்களுக்கு சிறையா?



சஹ்ரானுடன் இணைந்து செயற்பட்ட இருவர் விடுதலை செய்யப்பட்டுள்ள நிலையில் சஹ்ரானை வீதியில் கண்டவர்கள்,மேசையில் அமர்ந்து தேநீர் அருந்தியவர்கள் வருட கணக்கில் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளமை எந்தளவிற்கு நியாயமானது என ஐக்கிய மக்கள் சக்தியின் எம்.பி.யான முஜிபூர் ரஹ்மான் கேள்வி எழுப்பினார்.

பாராளுமன்றத்தில் நேற்று (21) வியாழக்கிழமை இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு எழுப்பினார்.

ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதல் சம்பவத்தின் பின்னரான காலப்பகுதி மக்களின் வாழ்க்கைக்கும்,தேசிய நல்லிணக்கத்திற்கும் பாரிய பாதிப்பை ஏற்படுத்தியது. தற்கொலை குண்டு தாரிகளின் தலைவருடன் சாரா ஜெஸ்மின் என்பவர் இருந்துள்ளார். சாரா இந்தியாவிற்கு தப்பித்துச் சென்றுள்ளார் என களுவாஞ்சிக்குடி முன்னாள் பொலிஸ் அதிகாரி அபூபக்கர் என்பவர் குறிப்பிட்டுள்ளார். இவர் இன்றும் தடுப்புக்காவலில் உள்ளார். சாரா மரணிக்கவில்லை, இந்தியாவில் உள்ளார் என்பது உறுதிப்படுத்தப்பட்டு உள்ளது. காத்தான்குடி தற்கொலைதாரிகளின் உடற்கூறு பரிசோதனைகளில் சாராவினதும் சாராவின் தாயாரினதும் மரபணு ஒத்துப்போகவில்லை என ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவில் குறிப்பிடப்பட் டுள்ளது. ஆனால் சாராவை சர்வதேச பொலிஸ் ஊடாக கைது செய்ய அரசாங்கம் இதுவரை பிடியாணை பிறப்பிக்கவில்லை என்றார்.



## காலிமுகத்திடல் போராட்டம்
# ‘பிக்மச்’ ஆக மாறிவிட்டது

ஜனாதிபதிக்கும் அரசாங்கத்திற்கும் எதிரான காலிமுகத்திடல் முன்னெடுக்கப்படும் இளைஞர், யுவதிகளின் போராட்டமானது ‘காணிவேல்’,‘பிக்மச்’ போன்று மாறிவிட்டதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை கருத்து வெளியிடுகையிலேயே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்,

ஜனாதிபதிக்கும் அரசாங்கத்திற்கும் எதிரான காலிமுகத்திடல் நடத்தப்படும் போராட்டம் முதலில் சிறந்த முறையில்தான் முன்னெடுக்கப்பட்டது. ஆனால் இப்போது அந்த இளைஞர் யுவதிகளின் போராட்டம் ‘காணிவேல்’,‘பிக்மச்’ போன்று மாறிவிட்டது. இந்த நிகழ்வுகளுக்கு சில அமைப்புக்கள் உணவுகள், குடிநீர்களையெல்லாம் வழங்கி வருகின்றன.

காலிமுகத்திடல் இளைஞர் யுவதிகளின் போராட்டம் ‘காணிவேல்’,‘பிக்மச்’ போன்று மாறிவிட்டதால் இப்போது அந்தப் போராட்டம் தொடர்பில் மக்கள் அக்கறை கொள்ளவில்லை. அந்தப்பக்கம் போகவே மக்கள் விரும்பவில்லை என்றார்.

## தொலைபேசி மூலம் சட்டங்களை
# செயற்படுத்த முடியாது
### கலாநிதி ஹர்ஷ டி சில்வா

நிதி அமைச்சர் வெளிநாட்டில் இருக்கும் நிலையில், நாட்டில் பதில் நிதி அமைச்சரோ, பிரதி அமைச்சரோ இல்லாது எரிபொருள் விலையை அதிகரித்துள்ளமையானது சட்டத்திற்கு முரணானது என எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினரான கலாநிதி ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார். எரிபொருள் விலை அதிகரிப்பால் உயிர் ஒன்று இல்லாது போயுள்ளது. தொலைபேசி மூலம் சட்டங்களை செயற்படுத்த முடியாது. அமைச்சர் இல்லாவிட்டால் பதில் அமைச்சரோ, பிரதி அமைச்சரோ இருக்க வேண்டும். தொலைபேசி மூலம் அதனை செய்ய முடியாது. இதன்படி எரிபொருள் விலை அதிகரிக்கப்பட்டுள்ளமை சட்டப்பூர்வமானது அல்ல என்றார்.

பாராளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை விசேட கூற்றை முன்வைத்து கருத்து வெளியிடும் போதே ஹர்ஷ டி சில்வா இவ்வாறு தெரிவித்துள்ளார். அதன்போது அவர் மேலும் கூறுகையில்,

இலங்கை பெட்ரோலியக் கூட்டுத்தாபன சட்டத்தின் பிரகாரம் அமைச்சரின் அனுமதி இன்றி எரிபொருள் விலையை அதிகரிக்க முடியாது. அப்படியாயின் பெட்ரோலியத் துறை அமைச்சர் அதற்கான அனுமதி பெற்றுக்கொண்டாரா? நிதி அமைச்சர் நாட்டுக்கு வெளியே இருக்கின்றார். அவருடைய கடமைகளை பார்க்க யாரும் இலங்கையில் இல்லை. மங்கள சமரவீர அமைச்சராக இருக்கும் போது வெளிவிவகார அமைச்சர் பதில் அமைச்சராக இருந்தார். இப்போது எவராவது நியமிக்கப்பட்டனரா எனவும் கேள்வி எழுப்பினார்.



# வழக்குத் தொடராமை பிரச்சினையாகும்

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையில் பரிந்துரைக்கப்பட்டுள்ளவர்கள் மீது வழக்குத் தொடர்வதற்கு நடவடிக்கை எடுக்காது இருப்பது பிரச்சனைக்குரியது என எதிர்க்கட்சி பிரதம கொரடாவான லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று (21) விசேட கூற்றை முன்வைத்து கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.அதன்போது அவர் மேலும் கூறுகையில்,

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்படுவதில்லை. வழக்குத் தொடர்வதற்கான குறிப்பிடப்பட்டுள்ளவர்களுக்கு வழக்கு தாக்கல் செய்ய நடவடிக்கை எடுக்கப்படவும் இல்லை. இதனையே பேராயர் உள்ளிட்ட அனைவரும் கூறுகின்றனர்.

தப்புல டி லிவேராவே வழக்குத் தாக்கல் செய்துள்ளதாக கூறுகின்றனர். ஆனால் தற்போதைய பிரதம நீதியரசர் மற்றும் சட்டமா அதிபரின் கீழ் தொடரப்பட்ட வழக்கில் இருந்து ஒவ்வொருவராக விடுதலை செய்யப்படுகின்றனர்.

## பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துமாறு
# சட்டமா அதிபரை கூறியுள்ளோம்
### பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் பரிந்துரைகளை விரைவாக நடைமுறைப்படுத்துமாறு சட்டமா அதிபரை கடிதம்மூலம் கோரியுள்ளதாக அரச தரப்பு பிரதம கொறடாவும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சருமான பிரசன்ன ரணதுங்க சபையில் தெரிவித்ததுடன், உயிர்த்த ஞாயிறு தாக்குதல் ஒரு சதி என்று ஒய்வு பெறவுள்ள சட்டமா அதிபர் தப்புல லிவேரா தெரிவித்தமைக்கு ஒருவேளை அவரது பதவிக்காலத்தை நீட்டிக்காமை காரணமாக இருக்கலாம் எனவும் குறிப்பிட்டார்.

பாராளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழைமை உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் எதிர்க்கட்சியினர் முன்வைத்த குற்றச்சாட்டுகளுக்கு பதிலளித்த போதே இவ்வாறு தெரிவித்தார்.

அமெரிக்க புலனாய்வு சேவை, அவுஸ்திரேலிய அரச புலனாய்வு சேவை மற்றும் மாலைதீவு அரச புலனாய்வு சேவை ஆகியவை விசாரணை மற்றும் வழக்கு தொடர்வதற்கு ஒத்துழைப்பு வழங்கின.

மேலும், தற்கொலைதாரிகள் மற்றும் அமைப்புகளின் ரூ.3,650 லட்சம் மதிப்புள்ள காணிகள், கட்டிடங்கள், வாகனங்கள் அரசுடமையாக்கப்பட்டன. அத்தோடு 1,680 லட்சம் மதிப்புள்ள தங்க நகைகள்,பணம் என்பனவும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன எனவும் அவர் குறிப்பிட்டார்.

உடனடிச் செய்திகளைத் தமிழ் மொழியில் பெற்றுக்கொள்ள எம்மோடு இணைந்திருங்கள்
தமிழ்Mirror
பதிவு செய்வதற்கு
Dialog Type TM and send to 87798
Daily Rs.1/=+TAX
HUTCH Type TM and send to 2233
Monthly Rs.30/=+ TAX
SLTMOBITEL Type REG TM and send to 77012
Daily Rs.1/=+TAX

### இயற்கை முறையில் பயிரிடப்படுவதற்கான விதை நெல்கள்

# 10 ஆயிரம் கி.கி கொள்வனவு

■ றொசேரியன் லம்பெட்

இயற்கை முறையில் நஞ்சற்ற விவசாய செய்கை, மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனம் மெசிடோவால் ஊக்குவிக்கப்பட்டது.

நெற்செய்கை மூலம் கடந்த வருட இறுதியில் பெறப்பட்ட பாரம்பரிய நெல், மன்னார், முருங்கன் நெற்களஞ்சியத்தில் வைபவ ரீதியாக வியாழக்கிழமை (21) களஞ்சியப்படுத்தப்பட்டு உள்ளது.

கடந்த வருட இறுதிப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட பெரும்போக செய்கையின் போது, தேர்ந்தெடுக்கப்பட்ட 100 விவசாயிகளுக்கு பாரம்பரிய நெல் விதைகளான 'சீனட்டி','மொட்டக்கறுப்பன்' போன்ற மரபணு மாற்றப்படாத விதைகள் மற்றும் நெற்செய்கை மேற்கொள்வதற்கான ஊக்குவிப்பு கொடுப்பனவு என்பன மெசிடோ நிறுவனத்தால் இலவசமாக வழங்கப்பட்டு, இயற்கை முறையில் விவசாய செய்கை மேற்கொள்ளப்பட்டது.



மேற்படி இயற்கை முறையில் மேற்கொள்ளப்பட்ட விவசாய செய்கையின் அறுவடை இவ்வாரம் இடம் பெற்ற நிலையில், 10,000 கிலோ கிராம் விதை நெல்கள் நேற்று (21) விவசாயிகளிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டு எதிர்வரும் போக செய்கைக்காக தயார் நிலையில் உள்ள, விவசாயிகளுக்கு இயற்கை முறையில் செய்கைக்காக இலவசமாக வழங்குவதற்கு என களஞ்சியப் படுத்தப்பட்டுள்ளன.

குறித்த நிகழ்வில், மன்னார் மாவட்ட செயலக திட்டமிடல் பணிப்பாளர், மன்னார் மெசிடொ நிறுவன பணிப்பாளர் ஜாட்சன் பிகிறாடோ, மெசிடோ நிறுவன அதிகாரிகள் கலந்து கொண்டு நெல் தூய்மைபடுத்தல் மற்றும் தொற்று நீக்குதல், களஞ்சியப்படுத்தல் செயற்பாட்டை ஆரம்பித்து வைத்தமை குறிப்பிடத்தக்கது.

### அமைச்சர் நசீர் அஹமட்டுக்கு எதிர்ப்பு

# ஜனாஸா பெட்டி தயாரித்து எரிப்பு

■ எச்.எம்.எம்.பர்ஸான்

சுற்றாடல் துறை அமைச்சராக சத்தியப்பிரமாணம் செய்து கொண்ட ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர் ஹாபீஸ் நசீர் அஹமடுக்கு மக்கள் மத்தியில் கடும் எதிர்ப்பு தோன்றியுள்ளது.

இன, மத வேறுபாடின்றி அனைவரும் அரசாங்கத்துக்கு எதிராக ஆர்ப்பாட்டங்கள் செய்து வரும் நிலையில், ஹாபீஸ் நசீர் அஹமட், அமைச்சராக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டமையை எதிர்த்து அவரது சொந்த ஊரான ஏறாவூர் நகரில் மக்கள் எதிர்ப்பை தெரிவித்து வருகின்றனர்.

ஏறாவூர் மணிக்கூட்டுக் கோபுரச் சந்தியில் பிரதேச மக்கள் ஒன்றுசேர்ந்து, சுமார் இரண்டு மணித்தியாலம் கடும் எதிர்ப்பை, செவ்வாய்க்கிமை (19) வெளிப்படுத்தினர்.



ஹாபீஸ் நசீர் அஹமட், 20 ஆவது திருத்தச் சட்டத்துக்கு ஆதரவு தெரிவித்தமைக்கும் "கொரோனா ஜனாஸாக்கள் எரிக்கப்படவில்லை; ஜனாஸா பெட்டிகள் மாத்திரமே எரிக்கப்பட்டன" போன்ற கருத்துகளை கடந்த காலங்களில் தெரிவித்தமைக்கு எதிராகவும் ஆர்ப்பாட்டக்காரர்கள் கோஷம் எழுப்பி, தங்களது எதிர்ப்பை தெரிவித்தனர்.

இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தின் போது அமைச்சர் ஹாபீஸ் நசீர் அஹமடின் உருவப்படம் பொறிக்கப்பட்ட ஜனாஸா பெட்டி, தயாரிக்கப்பட்டு அதை ஆர்ப்பாட்டக்காரர்கள் சுமந்து சென்று, தீயிட்டு தங்களது ஆத்திரத்தை வெளிப்படுத்தினர்.

### 77 மாணவர்களுக்கு

# ஒட்டுசுட்டான் பொலிஸ் நிலையத்தால் உதவி



■ செ.கீதாஞ்சன்

முல்லைத்தீவு, ஒட்டுச்சுட்டான் பொலிஸ் பிரிவில், வறுமைக் கோட்டுக்கு கீழுள்ள, பாடசாலை மாணவர்கள் 77 பேருக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன. ஒட்டுசுட்டான் பிரதேச பொலிஸ் நிலைய உத்தியோகத்தர்களால், இந்த உபகரங்கள் வழங்கிவைக்கப்பட்டன.

கூழாமுறிப்பு அ.த.க.பாடசாலையில் கல்வி கற்றுவரும் 77 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் புதன்கிழமை (20) வழங்கப்பட்டன.

வடமாகாண பொலிஸ் அத்தியட்சகரின் வழிநடத்தலில் முல்லைத்தீவு மாவட்ட பொலிஸ் அதிகாரியின் ஆலோசனைக்கு அமைய, ஒட்டுசுட்டான் பொலிஸ் நிலைய உத்தியோகத்தர்களால் சேகரிக்கப்பட்ட நிதியைக் கொண்டு மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கிவைக்கப்பட்டன.

### புதுக்குடியிருப்பில் வாள்வெட்டு

# பெண் உட்பட 6 பேர் கைது

## ஒருவருக்கு வலைவிரிப்பு

■ செ.கீதாஞ்சன்

புதுக்குடியிருப்பில் பல்வேறு குற்றச்செயல்களுடன் தொடர்புடைய 6 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். அவர்களிடமிருந்து வாளும் கொள்ளையிடப்பட்ட நகைகள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன என பொலிஸார் தெரிவித்தனர்.


முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதிகளில் கடந்த வாரத்தில் இடம்பெற்ற மூன்று கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரிலேயே இந்த அறுவரும் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

தேவிபுரம் பகுதியில், கடந்த 16 ஆம் திகதியன்று வாள்வெட்டு தாக்குதலை மேற்கொண்டு வயோதிப தம்பதிகளை காயப்படுத்திவிட்டு தாலியை கொள்ளையடித்து சென்றுள்ளமை, விசுவமடு பகுதியில் தங்க சங்கிலி அறுப்பு, கோம்பாவில் பகுதியில் நகையை கொள்ளையிட்டமை, இன்னும் பல வாள்வெட்டு சம்பவங்கள் தொடர்பிலேயே கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவர்களில் இருவர், முழங்காவில், செல்வபுரம் பகுதியைச் சேர்ந்தவர்கள். ஏனையோர் புதுக்குடியிருப்பு பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் என விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இந்தக் கொள்ளைச் சம்பவத்துடன் தொடர்புடைய மேலும் ஒருவரைத் தேடிவருவதாக புதுக்குடியிருப்பு பொலிஸார் தெரிவித்தனர்.

கொள்ளையிடப்பட்ட நகைகள், கடைகளில் விற்பனை செய்யப்பட்டுள்ளன. அவ்வாறு நகையை வாங்கிக்கொண்ட பெண்ணொருவர் உட்பட அறுவரையும் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தவும், கைப்பற்றப்பட்ட பொருட்களை முன்னிலைப்படுத்தவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என பொலிஸார் தெரிவித்தனர்.



### உடற்கல்வியியல் விஞ்ஞானமாணி

# சிறப்புப்பட்ட கற்கை நெறி ஆரம்பம்

■ நிதர்ஷன் வினோத்

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் முதன்முதலாக ஆரம்பிக்கப்படும் உடற்கல்வியியல் விஞ்ஞானமாணி சிறப்புக் (Bachelor of Science Honors in Physical Education) கற்கை நெறிக்கான திசைமுகப்படுத்தல் நிகழ்வு ( Orientation Programme) புதன்கிழமை (20) ஆரம்பமானது.

இந்தக் கற்கை நெறியை தொடர்வதற்கு, உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள், விளையாட்டுத் துறைசார் திறமையின் அடிப்படைகளில், மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

> கற்கை நெறிக்கு, உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள், விளையாட்டுத் துறைசார் திறமையின் அடிப்படைகளில், தெரிவு செய்யப்பட்டனர்

யாழ். பல்கலைக் கழக இணைந்த சுகாதார விஞ்ஞானங்கள் பீடத்தின் விளையாட்டு விஞ்ஞானத் துறைத் தலைவர் கலாநிதி சி. சபா ஆனந் தலைமையில் இந்நிகழ்வு நடைபெற்றது.

இந்த நிகழ்வில், துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா,




முன்னாள் துணைவேந்தரும், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு உறுப்பினருமான சிரேஷ்ட பேராசிரியர் வசந்தி அரசரட்ணம், முன்னாள் துணைவேந்தரும் வாழ்நாள் பேராசிரியருமான பொ. பாலசுந்தரம்பிள்ளை, இணைந்த சுகாதார விஞ்ஞானங்கள் பீடாதிபதி திருமதி தெய்வி தபோதரன் ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர்.

இவர்களுடன், பல்கலைக்கழகத்தின் பதிவாளர், நிதியாளர், நூலகர், மாணவர் நலச்சேவைகள் பணிப்பாளர் உட்பட்ட அதிகாரிகளும் கலந்து கொண்டு புதுமுக மாணவர்களுக்கு பல்கலைக்கழக நடைமுறைகள் மற்றும் மாணவர் செயற்பாடுகள் குறித்து விளக்கமளித்தனர்.

# கலந்துரையாடல்



■ எப்.முபாரக்

தற்போதைய அசாதாரண சூழ்நிலையில், மக்களுக்கு துரித கதியில் சேவைகளை வழங்குவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கான கலந்துரையாடல் குச்சவெளியில் இடம்பெற்றது.

குச்சவெளி பிரதேச சபையின் தவிசாளர் ஏ.முபாறக் தலைமையில் பிரதேச சபையின் உறுப்பினர்களுடன், நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில், கீழ் கண்ட விடயங்கள் ஆராயப்பட்டன.

1. சபையின் அதிகாரத்தை உபதவிசாளரிடம் கையளிப்பது.

2. தற்போதைய இக்கட்டான காலகட்டத்தை கருத்தில் கொண்டு, பொதுமக்களுக்கு வழங்க தீர்மானிக்கப்பட்ட வாழ்வாதார உதவிகளை துரிதப்படுத்துவது.

3. தற்போதைய இக்கட்டான நிலையில், சபையின் எல்லைக்குட்பட்ட பொது மக்கள் எதிர்நோக்கும் எரிவாயு, எரிபொருள் கிடைக்காமை தொடர்பாகவும் அத்துடன் எரிபொருள் நிலையங்களில் பொதுமக்கள் எதிர்நோக்கும் அசௌகரியம் தொடர்பாகவும் மிக விரிவாக கலந்துரையாடப்பட்டது.

குறித்த விடயங்களை விரைவில் நடைமுறைப்படுத்த தீர்மானிக்கப்பட்டது.

# தற்காலிக ஏற்பாடுகளை செய்யுமாறு வலியுறுத்தல்



■ அ.அஸ்வர்

தூர இடங்களுக்கு கடமைக்காகச் செல்லும் அரச உத்தியோகத்தர்களுக்கு அருகிலுள்ள அலுவலகங்களில் கடமையாற்றுவதற்கான தற்காலிக ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டுமென கோரிக்கை விடுக்கப்படுகிறது.

தற்பொழுது நாட்டில் நிலவும் அசாதாரண சூழ்நிலைகள் காரணமாகவும் பொருட்களின் விலையேற்றம், எரிபொருள் பற்றாக்குறை, உள்ளிட்ட பல்வேறு காரணங்களாலும் அசௌகரிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ள தாம் தூர இடங்களிலுள்ள அலுவலகங்களுக்கு நாளாந்தம் பயணம் செய்வதாகவும் இதனால் உரிய நேரத்தில் கடமைக்குச் செல்ல முடியாதிருப்பதாகவும் இந்த அரச உத்தியோகத்தர்கள் தெரிவிக்கின்றனர்.

தமக்கு நாளாந்தம் ஏற்படும் இவ்வாறான அசௌகரியங்களை கவனத்திற் கொண்டு உடனடியாக அமலுக்குவரும் வகையில் தூர இடங்களில் கடமையாற்றும் அரச உத்தியோகத்தர்களை தற்காலிக அடிப்படையில் அருகிலுள்ள அலுவலகங்களில் கடமையாற்றுவதற்கான ஏற்பாடுகளைச் செய்யுமாறு கோரிக்கை விடுக்கப்படுகிறது.

# ஆணின் சடலம் மீட்பு

■ கனகராசா சரவணன்

மட்டக்களப்பு, கொக்குவில் பொலிஸ் பிரிவிலுள்ள பனிச்சையடி பகுதியிலுள்ள வெற்றுக் காணியிலுள்ள கிணற்றிலிருந்து உருக்குலைந்த நிலையில் அடையாளம் காணப்படாத நிலையில் ஆண் ஒருவரின் சடலம் புதன்கிழமை (20) மாலை மீட்டகப்பட்டுள்ளதாக கொக்குவில் பொலிஸார் தெரிவித்தனர்.

பனிச்சையடி பண்ணை வீதியிலுள்ள வெற்றுக்காணி ஒன்றின் கிணற்றில் இருந்து துர்நாற்றம் வீசிய நிலையில் பொதுமக்கள் பொலிஸாருக்கு தகவல் வழங்கியதையடுத்து அந்தச் சடலம் மீட்கப்பட்டது.

குறித்த சடலம் இதுவரை அடையாளம் காணப்படவில்லை என்பதுடன் நீதிமன்ற அனுமதியை பெற்று, சடலத்தை பிரேத பரிசோதனைக்காக வைத்தியசாலையில் ஒப்படைப்பதற்கான நடவடிக்கையை க பொலிஸார் மேற்கொண்டிருந்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கொக்குவில் பொலிஸார்மேற்கொண்டுவருகின்றனர்.



# அரசாங்கத்துக்கு எதிராக ஓட்டமாவடியில் ஆர்ப்பாட்டம்



■ எச்.எம்.எம்.பர்ஸான்

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியை கண்டித்து நாடளாவிய ரீதியில் அரசாங்கத்துக்கு எதிராக ஆர்ப்பாட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அந்தவகையில், வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட ஓட்டமாவடி பகுதியில் நேற்று (21) ஆர்ப்பாட்டமொன்று மேற்கொள்ளப்பட்டது.

கல்குடா சாரதிகள் சங்கம் ஏற்பாடு செய்திருந்த இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் கல்குடா வான் சாரதிகள். ஓட்டோ சாரதிகள், உழவு இயந்திர சாரதிகள், வர்த்தகர்கள், இளைஞர்கள் எனப்பலரும் கலந்து கொண்டு தங்களது எதிர்ப்பை வெளிப்படுத்தினார்கள்.

இந்த ஆர்ப்பாட்டம் ஓட்டமாவடி வான் தரிப்பிடத்தில் இருந்து ஓட்டமாவடி மேம்பாலம் வரை சென்று, மீண்டும் வான் தரிப்பிடத்தில் வைத்து முடிவடைந்தது.

போக்குவரத்துக்கு இடையூறுகள் இல்லாமல் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில், ரம்புக்கன துப்பாக்கிச்சூட்டு சம்பவத்தில் உயிரிழந்த சமிந்த லக்ஷானுக்காகவும் நினைவு கூரப்பட்டது.




ஹட்டனில் இராஜாங்க அமைச்சர்

# அரவிந்தகுமாருக்கு எதிராக போராட்டம்

எஸ்.கணேசன்

மக்களை வதைக்கும் அரசாங்கத்துக்கு எதிராகவும், அவ்வாறானதோர் அரசாங்கத்துக்கு ஆதரவு வழங்கி, இராஜாங்க அமைச்சு பதவியை பெற்றுக்கொண்ட அரவிந்தகுமாருக்கு எதிராகவும் ஹட்டனில் நேற்று (21) போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது, “மக்களை காட்டிக்கொடுத்த துரோகி” என விமர்சித்து, இராஜாங்க அமைச்சர் அரவிந்தகுமாரின் உருவபொம்மையை போராட்டக்காரர்கள் நடுவீதியில் வைத்து தீயிட்டு கொளுத்தி, எதிர்ப்பை வெளியிட்டனர்.

அத்துடன், மக்கள் கோரிக்கையை ஏற்று பதவி விலக மறுக்கும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் கொடும்பாவியும் எரிக்கப்பட்டது. ஹட்டன், ஸ்டிரதன் தோட்ட பகுதியைச் சேர்ந்த, பெருந்தோட்ட மக்கள் நேற்று தொழிலுக்கு செல்லாது, போராட்டத்தில் இறங்கினர்.

இப்போராட்டத்துக்கு முன்னர், அப்பகுதியில் உள்ள கிறிஸ்தவ திருச்சொரூபத்திற்கு முன்பாக மக்கள், உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவத்தில் உயிரிழந்த மக்களுக்கு மெழுகுவர்த்தி ஏற்றி அஞ்சலி செலுத்தினர். பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி வேண்டும் எனவும் பிரார்த்தித்தனர்.

“அரசாங்கம் எடுத்துள்ள முயற்சி வெற்றி பெறுவதற்கான

# அறிகுறி தென்படவில்லை”

## செந்தில் தொண்டமான் தெரிவிப்பு

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியை முன்னாள் அமைச்சர்களாலேயே சமாளிக்க முடியாத நிலையில், தற்போது இரண்டாங்கட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் அமைச்சரவை அமைச்சர்களாக நியமிக்கப்படுவதன் மூலம், நாட்டின் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிகளுக்கு அரசாங்கம் எவ்வாறு தீர்வுக்காண போகின்றது என இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் செந்தில் தொண்டமான் கேள்வி எழுப்பியுள்ளார்.

இரசாயன உரத்தை ஜனாதிபதி தடை செய்தமை தவறு என்று, ஒரு வருட காலத்திற்கு பிறகு ஒப்புக்கொண்டுள்ளதைப் போல், புதிதாக நியமிக்கப்பட்ட அமைச்சரவை நியமனங்கள் மூலம் பொருளாதார நெருக்கடியை சீர்செய்ய முடியவில்லை என்பதை விரைவில் ஒப்புக்கொள்வார்.

ஆட்சிபீடமேறும் அரசாங்கங்களுடன் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் பங்காளர்களாக இருந்த போதிலும், கடந்த காலங்களில் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்ட பல்வேறு கொள்கை ரீதியிலான பிரேரணைகளை, இலங்கை தொழிலாளர் காங்கிரஸானது காலத்துக்கு ஏற்ப ஆதரித்தும் எதிர்த்தும் வாக்களித்திருந்தது.

தற்போதைய சூழ்நிலையிலும் மக்களின் அபிலாஷைகளுக்கு ஏற்பவே இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் முடிவுகள்



அமைந்திருக்கும் என்பதற்கு மாற்றுக் கருத்துகளில்லை.

இன்றைய நிலையில், இ.தொ.காவின் தவிசாளரும், பாராளுமன்ற உறுப்பினருமான மருதபாண்டி ராமேஸ்வரனும் பொதுச் செயலாளர் ஜீவன் தொண்டமானும் உட்பட இ.தொ.காவின் முக்கிய பொறுப்பில் இருப்பவர்களும் கலந்துரையாடி, மக்கள் சார்ந்த முடிவுகளை எடுப்பதில் ஒருமனமாக இருக்கின்றோம்.

எல்லா வளங்களுடனும் இருந்த நாட்டைப் பொறுப்பேற்ற தற்போதைய அரசாங்கத்தால், நாடு பின்தள்ளப்பட்டுள்ள சூழ்நிலையில், தற்போது பின்தள்ளப்பட்டுள்ள நாட்டை மீண்டும் கட்டியெழுப்ப முடியுமா என்ற கேள்வி, எம் மனதில் எழுந்திருக்கிறது. எவ்வாறாயினும், மக்கள் சார்ந்த தீர்மானங்களையே இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் என்றும் எடுக்கும் என தெரிவித்துள்ளார்.



## கால்கோள் விழா



தரம் ஒன்று மாணவர்களை பாடசாலைக்கு உள்வாங்கும் நிகழ்வு, கண்டி, பன்விலை–நெல்லிமலை சிவனேஸ்வரா தமிழ் வித்தியாலயத்தில் அதிபர் ம. நவநீதன் தலைமையில் நடைபெற்றது. இதில் பிரதம அதிதியாக வத்தேகம கல்வி வலய பாடசாலைக்கான இணைப்பாளர் திருமதி கே ஜெயந்தி, விசேட அதிதியாக அகில இலங்கை சமாதான நீதவான் முத்துக்குமார் சாந்தகுமார் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# விபத்தில் இளைஞர் பலி

## முட்டிய ஓட்டோவை தேடும் பொலிஸார்

ஆ.ரமேஸ்

இராகலை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட சென் ஜோன்ஸ் தோட்டத்தில் நேற்றுமுன்தினம் (20) இரவு இடம்பெற்ற வீதி விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்த இளைஞர் சென்ஜோன்ஸ் தோட்டத்தை சேர்ந்த 28 வயதான விஜயரட்னம் ஜீவரட்னம் என இராகலை பொலிஸார் தெரிவித்தனர்.

தனது நண்பர் ஒருவருடன் நுவரெலியா-இராகலை பிரதான வீதியின் சென்ஜோன்ஸ் தோட்டத்துக்கருகில் நடந்து சென்ற இவர்கள் மீது, ஓட்டோவொன்று வேகமாக மோதி தப்பிச் சென்றதாக, இராகலை பொலிஸார் மேற்கொண்ட ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

இந்தச் சம்பவத்தில் காயமடைந்த மற்றைய நபர், சிகிச்சைக்காக நுவரெலியா மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மேலதிக விசாரணைகளை இராகலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



# நீதி கோரி மரத்தில் ஏறி போராட்டம்

எஸ் சதீஸ்

ரம்புக்கனை துப்பாக்கிசூட்டில் உயிரிழந்த நபருக்கு நீதி கோரி, இன்ஜெஸ்ரி தோட்டத்தைச் சேர்ந்த நபர் ஒருவர், 100அடிஉயரமான மரத்தில் ஏறி போராட்டமொன்றை முன்னெடுத்துள்ளார்.

டிக்கோயா, இன்ஜஸ்றி கீழ் பிரிவைச் சேர்ந்த, 44 வயதுடைய பழனியாண்டி முருகேஸ் என்ற நபரே நேற்று (21) காலை இவ்வாறு போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார்.

ரம்புக்கனை பகுதியில் துப்பாக்கி சூட்டில் பலியான நபருக்கு நீதி கோரியும் அத்தியாவசிய பொருட்களின் விலையேற்றத்தை கண்டித்தும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலக வேண்டும் என வலியுறுத்தியும் ‘கோட்டா கோ கோம்’ போன்ற பதாகைகளை மரத்தில் காட்சிப்படுத்தி இந்தப் போராட்டத்தை முன்னெடுக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

ரம்புக்கனை விவகாரம்

# கைதான மாணவனுக்கு பிணை

என்.ஆராச்சி

இந்த மாதம் 19ஆம் திகதி, ரம்புக்கனையில் இடம்பெற்ற எதிர்ப்பு நடவடிக்கையை அடுத்து, கைதுசெய்யப்பட்ட பாடசாலை மாணவன் ஒருவர் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

18 வயதான குறித்த மாணவன், கேகாலை பகுதியிலுள்ள பிரபல பாடசாலையில் கல்வி கற்று வருவதுடன், 19ஆம் திகதி ஆர்ப்பாட்டத்தையடுத்து பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டார்.

அத்துடன், குறித்த மாணவனுக்கு எதிராக பல குற்றச்சாட்டுகளை பொலிஸார் சுமத்தியிருந்ததுடன், பொலிஸாரால் கடுமையாக தாக்குதலுக்கு இலக்காகியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், கைதுசெய்யப்பட்ட மாணவன், நேற்றுமுன்தினம் (20) கேகாலை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட போது, 50,000 ரூபாய் சரீரரப் பிணை இரண்டில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

அத்துடன் இன்றைய தினம் கேகாலை வைத்தியசாலையின் நீதிமன்ற வைத்தியரிடம் அறிக்கையைப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் நீதவான் பணித்துள்ளதுடன், குறித்த வழக்கை இந்த மாதம் 28ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ள உத்தரவிட்டுள்ளார்.



பதுக்கிய சிலிண்டர்கள்

# நுகர்வோருக்கு பகிரப்பட்டன

ரஞ்சித் ராஜபக்ஸ

நபர் ஒருவரின் வீட்டில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த நிலையில், பொலிஸாரின் பொறுப்பின் கீழ் எடுக்கப்பட்ட 230 சமையல் எரிவாயு சிலிண்டர்கள், ஹட்டன் நீதவானின் உத்தரவுக்கமைய, நேற்று முன்தினம் (20) நுகர்வோருக்கு விநியோகிக்கப்பட்டன.

லிட்ரோ முகவர் நிலையம் ஒன்றின் சாரதியாக கடமையாற்றும் நபர் ஒருவரின், கினிகத்தேனை, அம்பகமுவ பகுதியில் உள்ள வீடொன்றிலிருந்து 230 சமையல் எரிவாய சிலிண்டர்களை பொலிஸார் கைப்பற்றி இந்த மாதம் 15ஆம் திகதி அனைத்து சிலிண்டர்களையும் தமது பொறுப்பில் எடுத்தனர்.

இந்த நிலையில், நுகர்வோர் சேவை அதிகாரிகளால் 19ஆம் திகதி சந்தேகநபர் ஹட்டன் நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட போது, அவரிடம் 10,000 ரூபாய் அபராத தொகையை அறவிடுமாறும் கைப்பற்றப்பட்ட சிலிண்டர்களை அரசாங்கத்தின் நிர்ணய விலையில் நுகர்வோருக்கு பகிர்ந்தளிக்குமாறும் நீதவான் உத்தரவிட்டிருந்தார்.

அந்த உத்தரவுக்கமைய, 230 சமையல் எரிவாயு சிலிண்டர்கள் நேற்று முன்தினம் (20) கினிகத்தேனை பொலிஸாரால் நுகர்வோருக்கு பகிர்ந்தளிக்கப்பட்டன.

# நுவரெலியாவில் தேங்காய்க்கு தட்டுப்பாடு

ஆ.ரமேஸ்

நுவரெலியா, கந்தப்பளை, இராகலை, உடப்புஸ்ஸலாவை ஆகிய நகரங்களில் தேங்காய்க்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

சித்திரை புத்தாண்டுக்கு பின்னரான காலப்பகுதியில் சடுதியாக குறைவடைந்து வந்த தேங்காய்களுக்கு, தற்போது முற்றாக தட்டுப்பாட்டு ஏற்பட்டுள்ளதாக வர்த்தகர்கள் தெரிவிக்கின்றனர்.

குருநாகல், சிலாபம், கண்டி போன்ற தூர பிரதேசங்களில் இருந்தே மேற்படி நகரங்களுக்கு தேங்காய்கள் விற்பனைக்காக கொண்டுவரப்படுவதாகவும் சமீப காலமாக குறித்த பிரதேசங்களிலிருந்து தேங்காய் கொண்டு வருவது இடைநிறுத்தப்பட்டு உள்ளதாகவும், நாட்டில் ஏற்பட்டுள்ள எரிபொருள் பிரச்சினையே இதற்கு காரணம் என்றும் வர்த்தகர்கள் தெரிவிக்கின்றனர்.

மலையகத்தின் பல இடங்களிலும்

# எதிர்ப்பு கோஷங்கள்

ஆ.ரமேஸ், கேதீஸ், சதீஸ்

கந்தப்பளை பிரதேசத்திலுள்ள பத்துக்கும் மேற்பட்ட தோட்டங்களின் தொழிலாளர்கள் ஒரு நாள் அடையாள பணி பகிஷ்கரிப்பில் நேற்று (21) ஈடுபட்டனர்.

இவ்வாறு பணி நிறுத்தத்தில் ஈடுபட்ட 500க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள், அரசாங்கத்துக்கும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கும் எதிராகவும் கந்தப்பளை நகரில் போராட்டம் ஒன்றையும் நடத்தினர்.

இதன் காரணமாக நுவரெலியா, இராகலை, உடப்புஸ்ஸலாவை, வலப்பனை, கோனப்பிட்டி ஆகிய பிரதேசங்களுக்கான போக்குவரத்து தடைப்பட்டது.

இதேவேளை, 2019 ஆம் ஆண்டு ஏப்ரல் 21 ஆம் திகதி ஈஸ்டர் பண்டிகை தினத்தன்று தாக்குதல் நடத்தப்பட்டு, மூன்று வருடங்களாகியும் இன்றுவரை



சரியான நீதி விசாரணை நடத்ததப்படவில்லை. இந்தத் தாக்குதலுக்கு நேர்மையான நீதி கோரி, நுவரெலியா இளைஞர்கள் ஒன்று திரண்டு நுவரெலியா பிரதான தபாலகத்திற்கு அருகில் நேற்று (21) வியாழக்கிழமை சுலோகங்கள் ஏந்தியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அத்துடன் பொகவந்தலாவை தெரேசியா தோட்டத் தொழிலாளர்கள், நேற்று டியன்சின்



நகரில் பாரிய ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

ஹட்டன் - பொகவந்தலாவை பிரதான வீதியினை மறித்து, டயர்களை எரித்து மேற்கொண்ட ஆர்ப்பாட்டம் காரணமாக பொகவந்தலாவ டியன்சின் நகரம் சுமார் இரண்டு மணித்தியாலங்கள் புகை மண்டலமாக காணப்பட்டது.

இதனால் ஹட்டன்-பொகவந்தலாவை பிரதான வீதியின் போக்குவரத்து இரண்டு மணித்தியாலம் பாதிக்கப்பட்டிருந்தன.

டயர்களை எரித்தமையால்

# காபட் வீதி சேதமடைந்தது

ரஞ்சித் ராஜபக்ஸ

வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு, எரிபொருள் விலையேற்றம் மற்றும் அரசாங்கத்துக்கு எதிராக நேற்று (21) பொகவந்தலாவை நகரில் டயர்களை எரித்து போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்ட நிலையில், புதிதாக காபட் இடப்பட்டு புனரமைக்கப்பட்ட குறித்த வீதி சேதமடைந்துள்ளது என நோர்வூட் பிரதேச சபை தெரிவித்துள்ளது.

பாரிய நிதி செலவில் ஒரு வருடத்துக்கு முன்னர்,



பொகவந்தலாவை வீதி புனரமைக்கப்பட்டதாகவும், நேற்றைய தினம் அங்கு டயர்கள் எரிக்கப்பட்டமையால் வெப்பத்தால் சேதமடைந்து, போடப்பட்ட காபட் கழன்றுள்ளதாகவும் நோர்வூட் பிரதேச சபை தெரிவித்துள்ளது.

# உறவுகளுக்காக கண்ணீர் விட்டும் நீதிக்காக ஏங்கியுமே காலங்கள் கடக்கின்றன

இன்றைக்கு மூன்று வருடங்களுக்கு முன்னர், 2019 ஏப்ரல் 21ஆம் திகதியன்று, உலகவாழ் கிறிஸ்தவர்களின் மனங்களில் ஆறாத வடுவை ஏற்படுத்திய சம்பவம்தான், உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்களாகும்.

உலகவாழ் அனைத்து இனங்கள், மதங்களைச் சேர்ந்த மனிதநேயமுள்ள மக்களின் வாழ்விலும், ஒரு துன்பகரமான நாளாகவே இலங்கையில் (21/4) விடிந்தது. அதற்குப்பின்னர், பரஸ்பர குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டன. தகவல்கள் கிடைத்தும் தடுக்க முயற்சிக்கவில்லையென ஆட்சியிலிருந்த அரசாங்கத்தின் மீதும், பொறுப்புவாய்ந்த அதிகாரிகள் சிலருக்கு எதிராகவும் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டன.

ஜனாதிபதி ஆணைக்குழு விசாரணை எனும் பெயரில், பல்லாயிரக்கணக்கான பக்கங்களில் அறிக்கைகள் தயாரிக்கப்பட்டன. குற்றஞ்சாட்டப்பட்ட அதிகாரிகள் நீதிமன்றத்தின் ஊடாக நீண்டநாள்களுக்குப் பின்னர் விடுதலை செய்யப்பட்டனர். எனினும், சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டவர்கள் சிறைகளில் இன்னும் வாடுகின்றனர்.

உறவுகளை இழந்தவர்கள், கல்லறைகளைப் கட்டிப்பிடித்து இன்னும் அழுது கொண்டிருக்கின்றனர். அவயவங்களை இழந்தவர்கள், மாற்றுத்திறனாளிகளாக வாழ்கின்றனர். உயிர்த்த ஞாயிறு சம்பவத்தை வைத்து, இன்னுமே சிலர் அரசியல் பிழைப்பு நடத்திக்கொண்டிருக்கின்றனர்.

பாராளுமன்றத்தில் நேற்றைய (21) உரைகளை அவதானித்தால், பரஸ்பரம் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டு, பந்தை பறிமாற்றிவிட்டு தப்பித்துக்கொள்வதற்கே இருதரப்பினரும் முயற்சித்தனர். உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்களில் மரணித்தவர்களுக்காக சபைக்குள் ஒரிரு நிமிடங்களேனும் அஞ்சலி செலுத்தியமை வரவேற்கத்தக்கது என்றாலும், பாதிக்கப்பட்டவர்களின் கண்களில் சிந்தும் கண்ணீர் இன்னுமே துடைக்கப்படவில்லை.

இன-மத சௌஜன்யத்தை விரும்பாத சக்திகளால் முன்னெடுக்கப்பட்ட இந்தத் தாக்குதல்கள், மனிதாபிமானத்தைக் குழிதோண்டிப் புதைக்கும் விதத்தில், மிலேச்சத்தனமாக முன்னெடுக்கப்பட்டன. அதன்பின்னர்தான், தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் எனும் சிந்தனை ஒவ்வொருவர் மனங்களிலும் விதைக்கப்பட்டது.

இதனால், மக்கள் இன்னுமே வீதிகளில் நின்றுகொண்டிருக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலைமை ஏற்பட்டுள்ளது. ஆட்சிபீடம் ஏறுவதற்கே, உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டதாகவும் எதிரணியினர் குற்றச்சாட்டுகளை அடுக்கிக்கொண்டே செல்கின்றனர்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு வீடுகளை கட்டிக்கொடுப்பது, தேவாலயங்களை புனரமைப்பது உள்ளிட்டவை எல்லாம் ஒரு வகையான நிவாரணங்களாகும். எனினும், உறவுகளை இழந்தும், அங்கவீனர்களாகியும் வாழும் ஒவ்வொருவருடைய மனங்களிலும் ஏற்பட்ட காயங்கள் வடுக்களாக்கிவிட்டன; அவற்றை அழிக்கமுடியாது.

எமது நாட்டைப்பொறுத்தவரையில் சட்டத்துக்கு அப்பால் மேற்கொள்ளப்பட்ட எந்தவொரு சம்பவங்களுக்கும் நீதி கிடைக்கவில்லை; நியாயம் பெற்றுக்கொடுக்கப்படவில்லை. சில சம்பவங்களுக்கு நீதிமன்றங்களின் ஊடாக தண்டனை பெற்றுக்கொடுக்கப்பட்டு இருப்பினும் பலம் படைத்தவர்களுக்கு மன்னிப்பு கிடைத்துவிடுகின்றது.

மிலேச்சத்தனமான சம்பவங்கள் இனியும் நடந்துவிடாமல், கட்டமைப்பை உருவாக்கவேண்டும். உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் சம்பவங்களை வைத்து அரசியல் பிழைப்பு நடத்தாமல் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி, நியாயம் கிடைக்க வழிசமைக்க வேண்டுமென நாமும் வலியுறுத்துகின்றோம்.

தமிழ்Mirrorக்கு எழுதுங்கள்
www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk





## வாழ்வியல் தரிசனம்

கொஞ்சம் படித்தவர்கள் மட்டுமல்ல, மிகவும் படித்தவர்களும் கடவுள் பற்றி விமர்சனம் செய்யும்போது, அப்படி ஒன்றுமே இல்லை; கல்வி, விஞ்ஞானமே உண்மையானதும் உயர்ந்ததும் என்று சொல்வதுண்டு. ஆன்மிகம், மெய்யுணர்வு சம்பந்தமானது. படித்ததும் மெய்ப்பொருளைத் தெரிந்துகொள்ள முடியாது. இது உணர்வுபூர்வமானது. அனுபவங்களை நாங்கள் பெரிதாகப் பேசுகிறோம்.

மனித அனுபவங்கள் ஓர் எல்லைக்குள் அடங்கிவிடும். அதற்குமேல் நாம் யார்? என்னுடைய உயிர் நிலை என்ன? கடவுளைக் காணமுடியுமா? உலக மாற்றம் எப்படி உருவாகின்றன? எனப் பல கேள்விகளைக் கேட்டுக்கொள்வர். ஆனால், கேள்விகளுக்கான பதில்கள் தெரியாமலே, ஆன்மிகமே வெறும் பொய்; மானிட வாழ்க்கையுடன் கடவுள் கொள்கை வெறும் கற்பனை எனவும் சொல்வர்.

தனிமையில் அமைதிநிலையில் மனதை ஒடுக்கி, நடுநிலையில் இருந்தபடி, தேடலை ஆரம்பிக்கப் பொறுமையுடன் ஆன்ம சக்தியும் இணைய வேண்டும். எங்களை மீறிவரும் நினைவலைகளை எங்களால் நிறுத்த முடியாது உள்ளது.

எனவே தெளிவைத்தேட, பொறுமையும் ஆர்வமும் மனோ சக்தியில் நம்பிக்கையும் அவசியமானது. ஞானம் கல்விக்கு மேலானது. உண்மையை மட்டும் தேடுக. புற நிலைகளைத் தவிர்க்கவும். தங்களுக்குள் புது அலை புறப்படும்.

-பருத்தியூர் பால. வயிரவநாதன்

தடுமாறும்

# அரசாங்கத்துக்குச் சட்டங்கள் காவல்



தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ

இலங்கையின் இன்றைய நெருக்கடியை, ரம்புக்கனை கொலைகள் இன்னொரு தளத்துக்கு நகர்த்தியுள்ளன.

இலங்கையில் அரச பயங்கரவாதம் புதிதல்ல. பொலிஸ் அராஜகத்தின் வரலாறு மிக நீண்டது. ஆனால், செல்வந்தர்கள், உயரடுக்கினர் தவிர்த்து, முழு இலங்கையர்களும் பொருளாதார நெருக்கடியை அன்றாடம் எதிர்நோக்கி இருக்கையில், இந்த நிகழ்வு நடந்தேறியுள்ளது.

தமது வாழ்வாதாரத்துக்காகப் போராடிய மக்களை, அதே வாழ்வாதாரத்துக்காகத் தொழில்புரியும் பொலிஸ்துறையினர் துப்பாக்கியால் சுட்டுள்ளார்கள்.

போராடுகின்ற மக்கள், இதே பொலிஸ்துறையினருக்கும் சேர்த்துத்தான் போராடுகிறார்கள். இந்த நெருக்கடி யாரையும் விட்டுவைக்கவில்லை. வரிசைகளில் அனைவருமே நிற்கிறோம். அப்படியிருக்கையில் அவர்களை நோக்கி, 'கொலைக்கரங்கள்' எவ்வாறு நீண்டன?

இக்கேள்வி பிரதானமானது. கடந்த மூன்று தசாப்தங்களுக்கும் மேலாக, தமிழ்மக்கள் பல்வேறு வடிவங்களில் அரச பயங்கரவாதத்தை எதிர்கொண்டு வருகிறார்கள். அதேவேளை, சிங்கள மக்கள் இந்த அரச பயங்கரவாதத்துக்கு உட்படுவது இது முதன்முறையன்று. 1971, 1988-89 ஜே.வி.பி கிளர்ச்சிகளின் போதும் 2013இல் ரதுபஸ்வெவவிலும் அரசு தன் கோரமுகத்தைக் காட்டியது.

சுதந்திர இலங்கையின் முதலாவது ஜனநாயகப் படுகொலையான குடியுரிமைச் சட்டம், மலையக மக்களின் குடியுரிமையைப் பறித்தது. இதைக் கண்டித்து நடத்தப்பட்ட அமைதிவழிப் போராட்டத்தின்மீது, அரச வன்முறை ஏவப்பட்டது. இதுவே சுதந்திர இலங்கையில் அரசும் பொலிஸ்துறையும், எவ்வாறு நடந்துகொள்ளும் என்பதற்கான முதலாவது அறிகுறியாக இருந்தது. இந்த ஜனநாயக மறுப்பை, அரசின் வன்முறைக் கட்டவிழ்ப்பை விமர்சிக்கவோ, கண்டிக்கவோ யாரும் தயாராக இருக்கவில்லை. இதனால் அரச வன்முறை ஆளும் அரசாங்கங்களுக்கு பயனுள்ள கருவியானது.

1956இல் தனிச்சிங்களச் சட்டத்துக்கு எதிராக நடத்தப்பட்ட சத்தியாக்கிரகத்தின் மீது ஏவப்பட்ட வன்முறை, இதை அடுத்த கட்டத்துக்கு நகர்த்தியது. காலிமுகத்திடலில் தமிழர்கள் தாக்கப்படுவதைக் கண்டு, கவலையடைந்த சிங்கள அரசாங்க அலுவலர் ஒருவர், வீதியில் சென்றுகொண்டிருந்த பிரதமர் எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்காவை இடைமறித்து, "தமிழ்மக்கள் தாக்கப்படுகிறார்கள்" என்று தெரிவித்தபோது, அதற்கு பண்டாரநாயக்க, *"Let them geta taste of it"* என்று பதிலளித்திருந்தார்.

இந்த நிகழ்வு, முக்கியமான பாடமொன்றைச் சொல்கிறது. அரசுக்கு எதிரான போராட்டங்களுக்கு, அரசு வன்முறையைத் தொடர்ந்து ஏவிவந்த நிலையில், அதை எவ்வாறு எதிர்கொள்வது என்ற எந்தவொரு திட்டமிடலும் தமிழ்த்தரப்புகளிடம் இருக்கவில்லை.

தமிழர்கள் மீது வரன்முறையற்ற வன்முறையை ஏவமுடியும் என்பதை, சத்தியாக்கிரகத்தின் மீதாக வன்முறை காட்டிநின்றது. இந்த வன்முறைக்குப் பின்னரும் 1960களிலும் இதேவகைப்பட்ட சத்தியாக்கிரகங்களை அரசு வன்முறையால் எதிர்கொண்டது.

சுதந்திரத்துக்குப் பிந்தைய இலங்கையின் வரலாற்றில், அரச வன்முறை 1980களில் அரச பயங்கரவாதமாக உருவெடுத்தது. ஜே.வி.பி கிளர்ச்சியும் உள்நாட்டு யுத்தமும் அதை நியாயப்படுத்த வாய்ப்புகளை உருவாக்கின.

இலங்கையில் தொடர்ச்சியாக, அரசாங்கங்கள் தங்கள் இருப்பைத் தக்கவைத்துக்கொள்வதற்கு வன்முறையை ஓர் ஆயுதமாகப் பயன்படுத்தி வந்துள்ளன. அதன் அண்மைய உதாரணமே ரம்புக்கனை.

இதையே 1986ஆம் ஆண்டு, தேசிய கலை இலக்கியப் பேரவையால் வெளியிடப்பட்ட 'புதுவரலாறு நாமே படைப்போம்' என்ற ஒலிப்பேழைக்கு எழுதிய ஒரு பாடலில், கவிஞர் முருகையன் பின்வருமாறு குறிப்பிட்டார்:

'தடுமாறும் அரசுக்குச் சட்டங்கள் காவல்
தவறான விளங்கங்கள் தரநூறு பேர்கள்
சுடுமாறு உத்தரவாயின் யார்வீழ்ந்தால் என்ன
துணைநிற்கும் அதிகாரம் பிறகென்ன கவலை'

இன்றைய மக்கள் போராட்டங்கள், அரசாங்கத்தை அசைத்துள்ளன. ஆனால், இந்த மக்கள் போராட்டங்கள் அதன் இலக்கை எட்டுவதற்கு, இன்னும் நீண்ட தூரம் பயணிக்க வேண்டியதாய் உள்ளது. இந்த நெடிய போராட்டத்தில், அரச வன்முறை தவிர்க்கவியலாத அம்சமாக இருக்கப் போகின்றது. இதற்கு மக்கள் தயாராக இருக்கிறார்களா என்ற கேள்வியை எழுப்புவது தவிர்க்கவியலாதது.

ரம்புக்கனை கொலைகளைத் தொடர்ந்து, சமூக வலைத்தளங்களில் கருத்துத் தெரிவித்த சிலர், 'எங்களைப் போல் (காலிமுகத்திடல்) அமைதியாக அவர்கள் (ரம்புக்கனைப் போராட்டக்காரர்கள்) போராட்டத்தை முன்னெடுக்கவில்லை. அதனாலேயே வன்முறையை எதிர்கொள்ள நேர்ந்தது' என்று எழுதியிருந்தார்கள்.

இந்த மனநிலை மிகவும் ஆபத்தானது. அரசாங்கத்தின் கதையாடலை, இவர்கள் கேள்வியின்றி ஏற்றுக் கொள்கிறார்கள். கிடைக்கின்ற தகவல்களின்படி, பொலிஸார் கண்ணீர்ப்புகைக் குண்டுகளை வீசியதையடுத்தே, மக்கள் கற்களை வீசினார்கள். இதையே மாவோ, "நாம் என்ன ஆயுதம் ஏந்தவேண்டும் என்பதை, எதிரியே தீர்மானிக்கிறான்" என்றார்.

இந்தக் கருத்துகள், ஓர் உயர்மத்தியதர வர்க்க மனநிலையின் பிரதிபலிப்புகள். இந்த மனநிலையையே அரசாங்கம் வெகுவாக நம்புகிறது. குறைவற்ற எரிபொருட்களையும் தடையற்ற மின்சாரத்தையும் தட்டுப்பாடற்ற உணவுகளையும் வழங்குவதன் ஊடு, இந்தப் போராட்டக்காரர்களை வீட்டுக்கு அனுப்பவியலும் என உறுதியாக நம்புகிறது.

அடித்தட்டு மக்கள், இவ்வளவு காலமும் பெருமளவில் போராட்டங்களில் கலந்துகொள்ளவில்லை. மனதார ஆதரவு கொடுத்தாலும் அவர்கள் இன்னமும் அத்தியாவசியப் பொருட்களுக்கான வரிசைகளிலேயே நிற்கிறார்கள். இதுதான் கடந்த இரண்டுவார நிலைமையாக இருந்தது.

எரிபொருள் விலை அதிகரிப்பையடுத்து, செவ்வாய்கிழமை (19) வீதிக்கிறங்கிய மக்களே, அரசுக்கு அச்சத்தைக் காட்டினார்கள். அரசாங்கம் எதுவித தயக்கமுமின்றி, உடனடியாக வன்முறையை ஏவியுள்ளது. இதன்மூலம் அரசு, ஒரு வலிய செய்தியைச் சொல்ல முனைகின்றது. அரச வன்முறையை, பெரும்பான்மை சிங்கள சமூகம் எவ்வாறு எதிர்கொண்டுள்ளது என்பதை நோக்குவது, இதன் பல்பரிமாணத் தன்மையை விளக்க உதவும்.

1971இல் ஜே.வி.பி கலவரத்தை அரசு ஒடுக்கியபோது, குத்துமதிப்பாக சுமார் 10,000 பேர் கொலை செய்யப்பட்டார்கள். இதைக்கண்டித்து, அப்போது கவிதை, கதை, நாடகம் என பரவலாக வெளிப்படுத்தப்பட்டது. ஆனால், இந்நிலை பின்பு தொடரவில்லை.

1988-89 காலப்பகுதியில், சிங்கள இளைஞர்கள் கொல்லப்பட்டமையானது மக்களிடையே ஓர் எதிர்ப்பை தோற்றுவிக்காததற்குக் காரணம், ஜே.வி.பியின் பயங்கரவாதம். அரசாங்கம், ஜே.வி.பியின் பயங்கரவாதத்தை முறியடித்து விட்டது என்றே மக்கள் பார்த்தார்கள்.

இன்றைய நெருக்கடியும், அரசாங்கத்துக்கு எதிரான மக்கள் போராட்டங்களும் ஒரு முக்கியமான திருப்புமுனையில் நிற்கின்றன. பதவிவிலகுவதில்லை என்ற முடிவில் ஜனாதிபதி உறுதியாக இருக்கிறார். எதிர்த்தரப்பு அரசியல் கட்சிகளின் இயலாமையையும் அரசாங்கம் நன்கு அறிந்திருக்கிறது. பாராளுமன்றச் சட்டகத்துக்குள் விளையாடவே, எதிர்த்தரப்புக் கட்சிகள் விரும்புகின்றன.

ஏனெனில், மக்கள் போராட்டங்களும் வெகுஜன எழுச்சிகளும் இலங்கையின் பாராளுமன்றக் கட்சிகளுக்குப் புதிது. வாக்குப்பெட்டிகளில் ஆட்சியைப் பிடித்து, அதுவே புரட்சி என்று நம்பியிருந்தவை அவை. இன்றைய அரசியல் நெருக்கடி, பட்டவர்த்தனமாக வெளிப்படுத்தியுள்ள உண்மை யாதெனில், புரட்சிகர மாற்றங்களை மக்கள் விரும்பினாலும் அரசியல்வாதிகள் விரும்பவில்லை. சங்கீதக் கதிரைகளைத் தொடர்வதிலேயே அவர்கள் ஆர்வமாக இருக்கிறார்கள்.

இதிலிருந்து கொஞ்சம் வேறுபட்டுச் செயற்பட ஜே.வி.பி எத்தனிக்கிறது. அதனால் கடந்த சில நாள்களுக்கு முன்னர், பெரிய மக்கள் திரள் பேரணியை நடத்த முடிந்திருக்கிறது. ஆனாலும் பாராளுமன்றத்துக்கு உள்ளான விளையாட்டில் அதன் ஆர்வம் குறையவில்லை. ஜே.வி.பி கற்க வேண்டிய பாடம் ஏதெனில், பேரினவாத அரசியலை வைத்து, பாராளுமன்ற ஆசனங்களைப் பிடிப்பதில் முதலாளித்துவக் கட்சிகள் இரண்டும், அதனிலும் வல்லவை என்பது தான். ஆனாலும், அதனால் அந்த அரசியலை அதனால் கைவிட இயலாதளவுக்கு அதன் பேரினவாதப் பிரசாரங்கள் மக்கள் மனதில் நிற்கின்றன.

சிங்கள மக்கள் நடுவே உள்ள, நேர்மையான முற்போக்குச் சக்திகளுக்கு, இன்றைய நிலைமை மிகவும் சாதகமானது. பாராளுமன்ற அரசியலுக்கு வெளியே, என்.ஜி.ஓ உதவிகட்கும் அப்பால் ஒரு வெகுசன அரசியல் இயக்கம் கட்டி எழுப்பப்பட வேண்டிய தேவையுள்ளது. ஆனால், அதற்கான அறிகுறிகள் தென்படாமை துரதிர்ஷ்டமே!

காலிமுகத்திடலில், 'மக்கள் பல்கலைக்கழகம்' தொடக்கப்பட்ட நிகழ்வில் உரையாற்றிய பேராசிரியர் ஜெயதேவ உயன்கொட, தனது உரையை மாவோவின் மேற்கோள் ஒன்றுடன் மையப்படுத்தினார். இன்றைய தேவையும் அதுவே. "மக்களை நம்புங்கள்; அவர்களைச் சார்ந்திருங்கள்; அவர்களது முயற்சிகளுக்கு மதிப்புக் கொடுங்கள்; அவர்களிடமிருந்து கற்றுக்கொள்ளுங்கள். புரட்சி என்பது மிகவும் பக்குவப்பட்டதாகவோ, அன்புடனோ, கருணையுடனோ, கட்டுப்படுத்தப்பட்டதாகவோ, பெருந்தன்மையுடையதாகவோ இருக்க முடியாது. அவ்வாறான அவசியமும் இல்லை. இந்த மகத்தான புரட்சிகர இயக்கத்தில், மக்கள் தமக்குத்தாமே கற்பித்துக் கொள்வார்களாக; சரியானது எது? தவறானது எது என்பதைப் பிரித்துப் பார்க்கக் கற்றுக்கொள்வார்களாக. சரியான வழியில் செயற்படுவதற்கும் தவறான வழியில் செயற்படுவதற்கும் இடையே உள்ள வேறுபாட்டைப் புரிந்து கொள்வார்களாக. அதற்கு வழிகாட்டுவதாகப் புரட்சிகர அமைப்புகள் இயங்க வேண்டும்" என்றார்.

## கடிதங்கள்

### கல்முனை மாநகர சபை கவனிக்குமா?

### ஆபத்தான நிலையில் வடிகான்கள்

அம்பாறை மாவட்டம், கல்முனை மாநகர சபை பிரிவில், சகல ஊர்களிலும் உள்ள வீதிகளில் காணப்படும் வடிகான் மூடிகள் சேதமடைந்து உள்ளமையால், வீதிகளில் போக்குவரத்துச் செய்யும் பொது மக்கள், ஆபத்துகளையும் பெரும் சிரமங்களை எதிர் நோக்கியுள்ளதாக விசனம் தெரிவிக்கின்றனர்.

நீண்டகாலமாக, வடிகான் மூடிகள் உடைந்து காணப்படுவதால், மக்கள் விபத்துகளை சந்தித்து வருகின்றனர். மின்சார தடை நேரங்களில், குறித்த வீதிகளில் போக்குவரத்து பெரும் ஆபத்தானதாகவும் இடைஞ்சலாகவும் காணப்படுகிறது. அத்துடன், வாகனங்கள் சேதமடையக் கூடிய நிலையும் உள்ளது.

வீதியின் குறுக்காக உள்ள வடிகான் மூடிகள் உடைந்தும் சேதமடைந்தும் காணப்படுவது பற்றி, எவ்விதமான அறிவுறுத்தல்களும் இல்லையெனவும் இதனால் விபத்துகளை சந்திக்க நேரிடுவதாகவும் குறித்த விடயம் தொடர்பில் கல்முனை மாநகர சபைக்கு தெரியப்படுத்தியும் இது தொடர்பில் இதுவரை எந்தவித நடவடிக்கையும்மேற்கொள்ளவில்லை எனவும் பொதுமக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

பாடசாலை மாணவர்கள், பொதுமக்களின் பாதுகாப்பு கருதி, வீதிகளின் வடிகான் மூடிகளைப் புனரமைத்து தருமாறு, கல்முனை மாநகர சபையிடம் பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

நூருல் ஹுதா உமர்

சென்னை

தமிழகத்தில் 2021இல் மட்டும்

# சிறுவர் திருமணங்கள் 2,816 தடுத்து நிறுத்தம்




தமிழகத்தில் மார்ச் 2022 வரை சிறுவர் திருமணங்கள் 17,557 தடுத்து நிறுத்தப்பட்டுள்ளதாக சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை கொள்கை விளக்கக் குறிப்பில் தகவல் குறிப்பிடப்பட்டுள்ளது.

தமிழக சட்டப்பேரவையில் மாற்றுத்திறனாளிகள், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை மானியக் கோரிக்கை மீதான விவாதம் நேற்று (21) நடைபெற்றது. இதற்கு துறையின் அமைச்சர் கீதா ஜீவன் பதிலளித்தார்.

மாற்றுத்திறனாளிகள், சமூக நலன், மகளிர் உரிமைத்துறையின் கொள்கை விளக்கக் குறிப்பில் குழந்தைத் திருமணங்களைத் தடுத்தல், குழந்தைத் திருமண தடை சட்டம் தொடர்பாக குறிப்பிடப்பட்டுள்ளது. தமிழகத்தில் 2021 இல் மட்டும் 2,816 சிறுவர் திருமணங்கள் தடுத்து நிறுத்ததப்பட்டுள்ளன என்றார்.

சிறுவர் திருமண தடைச் சட்டமானது 2006ஆம் ஆண்டில் இயற்றப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

பாலக்காடு

6 மாதம் லிவிங் டு கெதர்:

# கேரள இளைஞனின் வீட்டின் முன் பழனி பெண் போராட்டம்

கேரளா, மஞ்சேரியை சேர்ந்த இளைஞன், சென்னையில் தங்கி கடந்த ஒரு வருடமாக படித்து வருகிறார். அதேபோன்று பழனி, அடிவாரம் பகுதியை சேர்ந்த இளம் பெண் சென்னையில் தங்கி தனியார் வங்கியில் வேலை பார்த்து வந்தார்.

கடந்த ஆறு மாதத்துக்கு முன்பு இவ்விருவருக்கும் பழக்கம் ஏற்பட்டு காதலித்து வந்துள்ளனர். அவ்விளைஞன் திருமண ஆசை வார்த்தையை கூறியுள்ளார். இருவரும் தனிவீடு எடுத்து, கடந்த ஆறு மாதங்களாக வாழ்ந்து வந்துள்ளனர்.

"எனது தந்தை வெளிநாட்டில் இருந்து வந்துள்ளார். கேரளா சென்று தந்தையை சந்தித்து திருமணத்துக்கு அனுமதி வாங்கி வருகிறேன்" என்ற தெரிவித்துவிட்டு கடந்த 10 நாள்களுக்கு முன்னர் அந்த இளைஞன் சென்றுள்ளார்.

வெகு நாள்களாகியும் அந்த இளைஞன், சென்னைக்கு திரும்பி வராததால் சந்தேகமடைந்த பெண், மஞ்சேரில் உள்ள வாலிபர் வீட்டுக்கு சென்றார். அப்படி யாரும் இல்லையென அவரது பெற்றோர்கள் தெரிவித்துள்ளனர்.

இதனால் ஆத்திரமடைந்த, அவர் இளைஞனை சந்திக்கும் வரை அவரின் வீட்டின் வெளியே தங்கி போராட்டம் நடத்தியுள்ளார். தொடர்ந்து மூன்று நாளாகப் போராட்டத்தில் ஈடுபட்ட பெண்ணுக்கு தெரியாமல் இளைஞனின் பெற்றோர் தலைமறைவாகி விட்டனர். அதனால் அதிர்ச்சி அடைந்த அந்தப் பெண் வீட்டின் முன்பு உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டார்.




சென்னை

# அரச ஊழியரின் 2ஆவது திருமணத்துக்கு சிக்கல்

பணியிலிருக்கும் அரச ஊழியர், முதல் மனைவி உயிரோடு இருக்கும்போது, இரண்டாவது திருமணம் செய்யக்கூடாது என்று தமிழக அரசு தெரிவித்துள்ளது. 1973 தமிழ்நாடு அரச பணியாளர் சட்ட விதிகளின்படியே இவ்வறித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

அவ்வாறு 2 ஆவது திருமணம் செய்வது ஒழுக்கக் கேடானது என்றும் அரசின் மரியாதைக்கு இழுக்கு ஏற்படுத்தும் செயல் என்றும் கூறியுள்ள தமிழக அரசு, மேலும் அரச ஊழியர் 2 ஆவது திருமணம் செய்வதால் சட்ட ரீதியாக முதல் மனைவிக்கு கிடைக்க வேண்டிய பலன்கள் கிடைப்பதில்லை என்றும் தெரிவித்துள்ளது.

மேலும் முதல் மனைவி உயிரோடு இருக்கும் போது 2 ஆவது திருமணம் செய்யும் அரசு ஊழியர் மீது, துறை ரீதியான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவித்துள்ளது.

சேலம்:

# கணவனை ஓட்டோ வைத்து தேடியலையும் மனைவி



கணவனை காணாமல் ஓட்டோ வைத்து கொண்டு, மனைவி தேடிக் கொண்டிருக்கிறார். இந்த பெண்ணின் சோகம், காண்போரை வேதனைக்குள்ளாக்கி வருகிறது.

வாழப்பாடியை அடுத்த முத்தம்பட்டி கேட் பகுதியை சேர்ந்தவர் சிவராமன். 45 வயதாகிறது. மனைவி பெயர் பழனியம்மாள்.

சிவராமன், வாழப்பாடி வட்டாட்சியர் அலுவலகத்திற்கு வரும் பொதுமக்களுக்கு விண்ணப்பம் பூர்த்தி செய்து கொடுத்து வந்தார்.

இதில் குறைந்த வருமானம்தான் கிடைத்து வந்துள்ளது. இருந்தாலும், முடிந்தவரையில் மனைவி, குழந்தைகளை மகிழ்ச்சியுடன் வாழ்ந்துகொண்டிருந்தார்; பாசத்தோடும் இருந்து வந்தார். இந்நிலையில், சிவராமனுக்கு திடீரென ஒரு நாள் உடம்பு சரியில்லாமல் போய்விட்டது.

தன்னுடைய வீட்டிலிருந்து கிளம்பி, வாழப்பாடிக்கு கடந்த ஏழாம் திகதியன்று சென்றுள்ளார். ஆனால், வீட்டுக்கு திரும்பி வரவேயில்லை. கணவர் வீட்டுக்கு வராததால் மனைவி பதறிவிட்டார்.

கிட்டத்தட்ட ஒருவாரத்துக்கு மேலாகவே பழனியம்மாள் ஓட்டோவில், ஊர் ஊராகத் தன்னந்தனியாக கணவரை தேடி வருகிறார். அவர் கையில் கணவரின் போட்டோவையும் வைத்து கொண்டே பயணிக்கிறார். சரியாக சாப்பிடுவது கூட இல்லையாம். எந்நேரமும் கணவரின் போட்டோவை பார்த்து பார்த்து அழுதுகொண்டே இருக்கிறார்.



சென்னை:

கோடநாடு கொலை, கொள்ளை வழக்கு:

# சசியிடம் கடும் விசாரணை

கோடநாடு கொலை, கொள்ளை வழக்கு விவகாரம் தொடர்பாக, சென்னை தியாகராயநகரில் உள்ள வீட்டில் சசிகலாவிடம் தனிப்படை பொலிஸார் விசாரணையைத் தொடங்கினர்.

ஏற்கெனவே இந்த வழக்கில் தொடர்புடைய 217 பேரிடம் பொலிஸார் விசாரணை மேற்கொண்டுள்ள நிலையில், தற்போது சசிகலாவிடம் விசாரணை நடைபெற்று வருகிறது. கோடநாடு பண்ணையில் காணாமல் போன நிலப்பத்திரங்கள் சென்னை ஹோட்டலில் கிடைத்தது குறித்து தனிப்படை பொலிஸார் விசாரணை மேற்கொள்கின்றனர்.

சசிகலாவிடம் சுமார் இரண்டரை மணிநேரம் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என இந்தியச் செய்திகள் தெரிவிக்கின்றன.

லக்னோ

ஜன்னல் வழியாக எட்டிப்பார்த்த மாணவன்

# தலையில் மின்கம்பம் மோதி உயிரிழப்பு

உத்தரப்பிரதேச மாநிலம், மோடி நகரிலுள்ள தனியார் பாடசாலையில் 3 ஆம் வகுப்பில் கற்கும் மாணவன், பாடசாலை பஸ்ஸில் ஜன்னல் ஓரத்தில் அமர்ந்திருந்திருந்து சென்றுள்ளார்.

திடீரென ஜன்னலின் வெளியே தலையைவிட்டு எட்டிப்பார்த்துள்ளான். மின்கம்பமொன்று சிறுவனின் தலையில் எதிர்பாராத விதமாக பயங்கரமாக மோதியது. இதனால், பலத்த காயமடைந்த சிறுவன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டான்.

எனினும், அங்கு மாணவனை பரிசோதித்த மருத்துவர்கள், ஏற்கெனவே இறந்துவிட்டதாக தெரிவித்தனர்.



சொத்து விற்பனை பற்றிய

# தகவல்களுக்கு மறுப்பு

ஸ்ரீ லங்கா டெலிகொம் (SLT) தனது சொத்துகள் விற்பனை செய்யப்படலாம் என அண்மையில் வெளியாகியிருந்த செய்திகள் மற்றும் அறிக்கைகளை SLT-MOBITEL நிர்வாகம் மறுப்புத் தெரிவித்து அறிக்கை வெளியிட்டுள்ளது.

இவ்வாறு வெளியாகியிருந்த அறிக்கைகளில், SLT பணிப்பாளர் சபையிடமிருந்து மற்றும் நிறுவனத்தின் 49.5% பங்குகளை கைவசம் கொண்டுள்ள திறைசேரியின் செயலாளரிடமிருந்து, தெளிவுபடுத்தப்படவில்லை என்றும் நிறுவனம் வெளியிட்டிருந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வாறானதொரு முடிவை தாம் மேற்கொள்வது பற்றி பரிசீலிக்கவில்லை என்றும், நிறுவனத்தின் தற்போதைய செயற்பாடுகளை அப்படியே தொடர உறுதிபூண்டுள்ளதாகவும் SLT தனது பங்குதாரர்கள், வாடிக்கையாளர்கள், ஊழியர்களுக்கு உறுதியளிப்பதாக அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளது.

# கொமர்ஷல் வங்கிக்கு தங்க விருது




2022ஆம் ஆண்டுக்கான லங்காபே தொழில்நுட்ப விருதுகள் வழங்கும் விழாவில் 'மிகச் சிறந்த பொது ATM செயற்படுத்துனர்' என்ற விருதை கொமர்ஷல் வங்கி வென்றுள்ளது.

கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் இந்த வருடம் கொமர்ஷல் வங்கியின் ATM செயற்பாடுகள் மற்றும் சேவைகள் என்பன பெரும் வளர்ச்சி கண்டு சாதனை படைத்துள்ளமைக்கான அங்கிகாரமாக இந்த விருது வழங்கப்பட்டுள்ளது. 'கார்ட்' விநியோகம், ATM பணப்பரிமாற்றம், மிகக் குறைந்த அளவிலான அட்டவணையிடப்பட்ட மற்றும் அட்டவணையிடப்படாத சேவைகள் என்பனவும் இந்த விருதுக்கு காரணங்களாக அமைந்துள்ளன. வங்கியின் ஒட்டுமொத்த ATM வலையமைப்பும் 'லங்காபே கார்ட்'களை ஏற்றுக் கொள்ளத்தக்கதாகவும், பொதுவான ATM அழுத்தியோடும் இணைக்கப்பட்டுள்ளன.

அந்த விருதோடு 'சில்லறைக் கொடுப்பனவுகளுக்கான மிகச்சிறந்த வங்கி', 'இந்த வருடத்தின் மிகவும் ஆக்கபூர்வமான வங்கி', 'லங்காபே இணையவழி கொடுப்பனவு மேடையை சிறப்பாகப் பெற்றுள்ள வங்கி' ஆகிய பிரிவுகளில் வெள்ளி விருதையும் 'வங்கிகளுக்கான டிஜிட்டல் கொடுப்பனவுகளில் ஒட்டு மொத்த சிறப்பாற்றல்' விருதையும் வங்கி பெற்றுள்ளது.

கொமர்ஷல் வங்கி, நாட்டில் முதன் முதலாக தனது ஒட்டுமொத்த ATM வலையமைப்புக்கும் EMV (யூரோ, மாஸ்டர் கார்ட், விஸா) பணப்பரிமாற்ற வசதிகளை 'இன்டர் கிரேடட் செர்கிட்' மூலம் பெற்றுக் கொண்ட வங்கியாகும். EMV சிப் அடிப்படையிலான கார்ட்களை (டெபிட் மற்றும் கிரடிட்) முதலில் அறிமுகம் செய்து லங்காபே ATM வலையமைப்புகள் ஊடாகவும் EMV கொடுக்கல் வாங்கல்களை அறிமுகம் செய்ததும் கொமர்ஷல் வங்கி தான். இதன் மூலம் கொமர்ஷல் வங்கியின் கார்ட் வைத்திருக்கும் ஒருவர் லங்காபே வலையமைப்போடு தொடர்புடைய ஏனைய வங்கி ATM களை பாவித்தும் தமது தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள முடியும்.

SLT–MOBITEL இன் வருடாந்த

# நிதி அறிக்கைக்கு கௌரவிப்பு

ஸ்ரீ லங்கா டெலிகொம் நிறுவனத்தின் வருடாந்த நிதி அறிக்கை 2020 க்கு, CA ஸ்ரீ லங்காவால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த 56 ஆவது வருடாந்த நிதி அறிக்கைகள், விருதுகள் வழங்கும் நிகழ்வில் தொலைத்தொடர்பாடல் பிரிவில் சிறந்த தங்க விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது.

ஸ்ரீ லங்கா டெலிகொம் வருடாந்த நிதி அறிக்கை 2020 பிரசுரிக்கப்பட்டது முதல், வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறல், சிறந்த ஆளுகை மற்றும் சமூகப் பொறுப்புணர்வு போன்றவற்றுடன் நிதி அறிக்கையிடலில் ஒட்டுமொத்த சிறப்பு போன்ற அம்சங்களுக்காக பல விருதுகளை சுவீகரித்திருந்தது.



56 ஆவது தடவையாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்த விருதுகள் வழங்கும் நிகழ்வில், கௌரவிக்கப்பட்ட சிறந்த முன்னணி நிறுவனங்கள் வரிசையில் SLT-MOBITEL அடங்கியிருந்தது. ஸ்ரீ லங்கா டெலிகொம் சார்பாக இந்த விருதை, குழும பிரதம நிதி அதிகாரி சஞ்ஜீவ சமரநாயக்க, முகாமைத்துவ கணக்கீடு மற்றும் செயற்திறன் முகாமைத்துவ பிரதி பொது முகாமையாளர் அசங்க விமலரட்ன, பொது உறவுகள் சிரேஷ்ட நிறைவேற்று உதவி முகாமையாளர் வஜிர ஹப்புஹின்ன ஆகியோர் அடங்கியிருந்தனர்.

ரஷ்யா

# கண்டம் விட்டு கண்டம் பாயும்

## ஏவுகணையை வெற்றிகரமாகச் சோதனை செய்தது ரஷ்யா

ரஷ்யாவின் அடுத்த தலைமுறைக்கான அதிநவீன கண்டம் விட்டு கண்டம் பாயும் 'சர்மட்' (Sarmat)ஏவுகணை சோதனை, வெற்றிகரமாக இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

'சாத்தானின் 2வது பாகம்' என மேற்குலக நாடுகளின் ஆய்வாளர்களால் அழைக்கப்படும் குறித்த ஏவுகணையின் சோதனை, வடக்கு ரஷ்யாவில் உள்ள பிளெசெட்ஸ்க் காஸ்மோட்ரோம் ஏவுதளத்தில் இடம்பெற்றுள்ளது.



இந்நிலையில் ஏவுகணை சோதனை வெற்றி பெற்றதற்கு வாழ்த்து தெரிவித்த அந்நாட்டு ஜனாதிபதி விளாடிமிர் புட்டின், "சர்மட் ஏவுகணையை யாராலும் வெல்ல முடியாது. உலகின் எந்த பகுதியையும் தாக்கி அழிக்கும் சக்தி கொண்டது" எனத் தெரிவித்துள்ளார்.

மேலும், "தனித்துவமான ஏவுகண; ரஷ்ய இராணுவத்தை வலுப்படுத்தும். வெளிநாட்டு அச்சுறுத்தல்களில் இருந்து நாட்டின் பாதுகாப்பை மேம்படுத்தும். ரஷ்யா மீது தாக்குதல் நடத்த நினைக்கும் நாடுகள், இனி இரு முறை யோசிக்க வேண்டும்" எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

ரஷ்யாவுக்கும் உக்ரேனுக்கும் இடையே பெப்ரவரி மாதம் 24 ஆம் திகதியிலிருந்து போர் இடம்பெற்று வரும் இந்நிலையில், ரஷ்யாவின் குறித்த ஏவுகணைச் சோதனையானது உலகளவில் ஏற்பட்டிருந்த போர் அச்சத்தை, அடுத்த கட்டத்துக்கு கொண்டுசென்றுள்ளது என்று சர்வதேச அவதானிகள் கருத்து தெரிவித்துள்ளார்கள்.



ஐ.பி.எல்:

# பஞ்சாப்பை வீழ்த்திய டெல்லி

இந்தியன் பிரீமியர் லீக்கில் (ஐ.பி.எல்), மும்பையில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற பஞ்சாப் கிங்ஸுடனான போட்டியில் டெல்லி கப்பிட்டல்ஸ் வென்றது.

இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற டெல்லியின் அணித்தலைவர் றிஷப் பண்ட், தமதணி முதலில் களத்தடுப்பிலீடுபடும் என அறிவித்தார்.

அந்தவகையில் முதலில் துடுப்பெடுத்தாடிய பஞ்சாப், வரிசையாக விக்கெட்டுகளைப் பறிகொடுத்து 20 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 115 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில், ஜிதேஷ் ஷர்மா 32 (23), அணித்தலைவர் 24 (15) ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில், அக்ஸர் பட்டேல் 4-0-10-2, கலீல் அஹ்மட் 4-0-21-2, லலித் யாதவ் 2-0-11-2, குல்தீப் யாதவ் 4-0-24-2, முஸ்தபிசூர் ரஹ்மான் 4-0-28-1 என்ற பெறுதிகளைக் கொண்டிருந்தனர்.

பதிலுக்கு 116 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய டெல்லி, டேவிட் வோணரின் ஆட்டமிழக்காத 60 (30), பிறித்திவி ஷோவின் 41 (20) ஓட்டங்களோடு 10.3 ஓவர்களில் ஒரு விக்கெட்டை இழந்த நிலையில் வெற்றியிலக்கையடைந்தது.

இப்போட்டியின் நாயகனாக குல்தீப் யாதவ் தெரிவானார்.

இந்நிலையில், இன்றிரவு 7.30 மணிக்கு நடைபெறவவுள்ள போட்டியில் ராஜஸ்தான் றோயல்ஸை டெல்லி எதிர்கொள்ளவுள்ளது.

மெக்சிகோ

மிருகக்காட்சி சாலை

## விலங்குகளுக்கு ஐஸ்கிரீம்





மெக்சிகோவில் உள்ள மிருகக் காட்சிசாலை யொன்றில் வெப்பத்தால் வாடும் விலங்குகளுக்கு புத்துணர்வு ஊட்டும் வகையில் ஐஸ்கிரீம் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மெக்சிகோவில் அண்மைக்காலமாக சுமார் 38 பாகை செல்சியஸ் வெப்பநிலை பதிவாகி வருகிறது. இந்நிலையில் அங்குள்ள விலங்குகள் உயர் வெப்பநிலையை சமாளிக்க ஏதுவாக, ஒவ்வொரு விலங்களுக்கும் ஏற்றவாறு பிரத்யேகமாக ஐஸ்கிரீம்களைத் தயார் செய்து, வழங்கி வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக, சிறுத்தைப் புலிகளுக்கு மாமிசத்தால் ஆன ஐஸ்கிரீம்களையும் கறுப்பு ஹவ்லர் குரங்குகள் உள்ளிட்ட விலங்குகளுக்கு பழங்களிலிருந்து தயாரிக்கப்பட்ட ஐஸ்கிரீம்களையும் வழங்கி வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் விலங்குகளின் இருப்பிடங்களுக்கு அருகில் குழிகள் தோண்டப்பட்டு, அதில் நீரை நிரப்பி விலங்குகள் நீராட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.





கிரீஸ்

## சுவரில்லா வீடு

கிரீஸில் சிறகை விரித்த பட்டாம்பூச்சியின் தோற்றத்தில் சுவரில்லா வீடு வடிவமைக்கப்பட்டுள்ளது.

வெள்ளை நிறத்தில் காணப்படும் குறித்த வீடானது சுமார் 5,381 சதுர அடியில் உருவாக்கப்பட்டுள்ளது.

அத்துடன் குறித்த வீட்டில் 4 படுக்கையறைகள், 4 குளியலறைகள் மற்றும் நீச்சல் குளம் அடங்கிய பல ஆடம்பர வசதிகள் அடங்கியுள்ளதாகவும் குறிப்பாக இவ்வீட்டைச் சுற்றி செயற்கை ஏரிகள் அமைக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இவ் வீட்டின் விலை 5.2 மில்லியன் பவுண்டுகள் என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. (இலங்கை மதிப்பில் 225 கோடி ரூபாய்).



அவுஸ்திரேலியா

## 'டெஸ்லா' அதிரடி அறிவிப்பு

உலகின் முன்னணி மின்சாரக் கார் உற்பத்தி நிறுவனமாக, உலகப் பணக்காரர்கள் வரிசையில் முதல் இடத்தில் உள்ள எலான் மஸ்கின் 'டெஸ்லா' நிறுவனம் திகழ்கின்றது.

இந்நிலையில் அந்நிறுவனமானது புதுவித முயற்சி ஒன்றில் இறங்கியுள்ளது.

அதாவது, அவுஸ்திரேலியாவில் சுமார் 15 ஆயிரம் கிலோ மீற்றர் தூரத்திற்கு சூரிய சக்தி மூலம் டெஸ்லா காரை மின்னேற்றி பயணிப்பதற்கான சோதனை முயற்சியில் விஞ்ஞானிகள் இறங்கியுள்ளனர்.

வரும் செப்டெம்பர் மாதம் தொடங்கவுள்ள இச் சோதனை ஓட்டத்தில், இலகுவாக சுருட்டி எடுத்துச்செல்லும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ள பிரத்தியேக சூரிய மின்சக்தி தயாரிப்பு கலங்கள் பயன்படுத்தப்படவுள்ளது.

மேலும், இச் சோதனை ஓட்டத்தின் போது, பகல் நேரங்களில் எப்போதெல்லாம் காரின் மின்கலத்துக்கு மின் தேவைப்படுகிறதோ அப்போதெல்லாம் காரை நிறுத்தி, குறித்த மின்சக்தி தயாரிப்புக் கலங்களை விரித்து, மின் எற்றி விட்டுத் தொடர்ந்து பயணம் செய்யலாம் எனவும் விஞ்ஞானி பால் டஸ்டூர் தெரிவித்துள்ளார்.

வழக்கமான சூரிய மின்சக்தி கலங்கள், இயற்கையாகக் கிடைக்கும் சிலிக்கனில் இருந்து தயாரிக்கப்படும் நிலையில், இவ்வகை சூரிய மின்சக்தி கலங்கள் இயற்கையாக கிடைக்கும் பொலிமர் வேதி பொருட்களை, மையாக மாற்றி, பிளாஸ்டிக் போன்ற எளிதில் மடங்கும் பொருட்கள் மீது அச்சிடப்படுவதாகவும் இம் மையின் மீது சூரிய ஒளி படும்போது மின்சாரம் உருவாகின்றதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், டெஸ்லாவின் இப்புதிய முயற்சிக்கு மக்கள் பெரும் வரவேற்புத் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

பிரித்தானியா

## வீட்டில் இருந்து மீட்கப்பட்ட மூவரின் சடலங்கள்

### பிரித்தானியாவில் பரபரப்பு



பிரித்தானியாவின் பக்கிங்ஹாம்ஷயர் பகுதியில் உள்ள ஒரு வீட்டிலிருந்து செவ்வாய்க்கிழமை (19) இரவு 3 பேரின் சடலங்கள் மீட்கப்பட்டது.

குறித்த வீட்டில் இருந்து துப்பாக்கிச் சத்தம் கேட்பதாக பொலிஸாருக்கு அயலவர்கள் தெரியப்படுத்தியிருந்த நிலையில், அங்கு சென்ற பொலிஸார் வீட்டில் மூவரது சடலங்கள் இருப்பதைக் கண்டு அதிர்ச்சியடைந்ததாகவும் , பின்னர் அச்சடலங்களை மீட்டு பிரேத பரிசோதனைக்காக வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் பொலிஸார் நடத்திய முதற்கட்ட விசாரணையில், 60 வயதைக் கடந்த ஆண் மற்றும் பெண் இருவரும், 50 வயதைக் கடந்த ஆண் ஒருவருமே இவ்வாறு உயிரழந்துள்ளனர் எனவும், அவர்களது உடலில் கடுமையான தாக்குதல்கள் நடத்தப்பட்டதற்கான ஆதாரங்கள் காணப்படுவதாகவும் உயிரிழந்த மூவரும் ஒருவருக்கு ஒருவர் அறிமுகமானவர்கள் எனவும் தெரிய வந்துள்ளது.



இங்கிலாந்து பிறீமியர் லீக்:

## செல்சியை வென்ற ஆர்சனல்

இங்கிலாந்து கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான பிறீமியர் லீக் தொடரில், செல்சியின் மைதானத்தில் நேற்று அதிகாலை நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில் 4-2 என்ற கோல் கணக்கில் ஆர்சனல் வென்றது.

ஆர்சனல் சார்பாக, எடி நிகிட்டியா இரண்டு கோல்களையும், எமிலி ஸ்மித் றோவே, புகாயோ ஸாகா ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர். செல்சி சார்பாக, திமோ வேர்னர், சீஸர் அத்பிலிகெட்டா ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.

இந்நிலையில், எவெர்ற்றனின் மைதானத்தில் நடைபெற்ற அவ்வணிக்கும், லெய்செஸ்டர் சிற்றிக்குமிடையிலான போட்டியானது 1-1 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிவடைந்தது. லெய்செஸ்டர் சார்பாகப் பெறப்பட்ட கோலை ஹார்வி பார்ண்ஸ் பெற்றதோடு, எவெர்ற்றன் சார்பாகப் பெறப்பட்ட கோலை றிஷலிஷன் பெற்றிருந்தார்.

அந்தவகையில், பிறீமியர் லீக் புள்ளிகள் பட்டியலில் 77 புள்ளிகளுடன் முதலாமிடத்தில் நடப்புச் சம்பியன்களான மன்செஸ்டர் சிற்றி காணப்படுகின்றது. 76 புள்ளிகளுடன் இரண்டாமிடத்தில் லிவர்பூலும், ஒரு போட்டி குறைவாக விளையாடியுள்ள செல்சி 62 புள்ளிகளுடன் மூன்றாமிடத்திலும், 57 புள்ளிகளுடன் நான்காமிடத்தில் டொட்டென்ஹாமும் காணப்படுகின்றன.

மாவட்ட செயலகத்தால் சர்வதேச, தேசிய விளையாட்டுகளில் பங்குபற்றி

## மட்டக்களப்பிலிருந்து வெற்றியீட்டியோரின் தரவுகள் கோரல்



மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து சர்வதேச மட்டங்களில் பங்குபற்றிய மற்றும் தேசிய விளையாட்டுக்களில் பங்குபற்றி வெற்றியீட்டிய விளையாட்டு வீர, வீராங்கனைகளின் தரவுகளை ஆவணப்படுத்துவதற்கான விண்ணப்பங்கள் மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தால் கோரப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபரும் மாவட்ட செயலாளருமான கே. கருணாகரனின் ஆலோசனைக்கு அமைவாக மேற்படி விளையாட்டு வீர, வீராங்கனைகளின் விபரங்கள் கீழ் வரும் பிரிவுகளின் அடிப்படையில் ஆவணப்படுத்தும் நோக்கில் கோரப்படுகின்றது.

1. 1990ஆம் ஆண்டிலிருந்து சர்வதேச மட்டத்தில் இலங்கை விளையாட்டுத்துறை அமைச்சின் அனுமதியுடன் பங்குபற்றிய போட்டிகள் அல்லது இலங்கை தேசிய அணி சார்பாக பங்குபற்றிய (தனிஅல்லது குழு) விளையாட்டு நிகழ்வுகளில் மட்டக்களப்பு மாவட்டம் சார்பாக பங்குபற்றியவர்கள் மற்றும் வெற்றியீட்டியவர்கள்.

2. 1990ஆம் ஆண்டிலிருந்து இலங்கை விளையாட்டுத்துறை அமைச்சால் நடத்தப்பட்ட தேசிய விளையாட்டு விழாவில் முறையே முதலாம், இரண்டாம், மூன்றாம் இடத்தைப் பெற்றுக்கொண்டவர்கள்.

மேற்படி விண்ணப்பங்களை ஏ4 தாளில் தயாரித்து உரிய சான்றிதழ்களின் பிரதிகளுடன் தங்களது பிரிவு விளையாட்டு உத்தியோகத்தர் ஊடாக பிரதேச செயலகத்திலோ அல்லது மட்டக்களப்பு மாவட்ட செயலக விளையாட்டுப் பிரிவிலோ தபால் மூலமோ அல்லது நேரடியாகவோ எதிர்வரும் திங்கட்கிழமைக்கு முன்னர் விண்ணப்பத்தை அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

வடக்கின் பெரும் சமர்:

## 167 ஓட்டங்களைப் பெற்ற சென். ஜோன்ஸ்



யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் நேற்று ஆரம்பித்த அவ்வணிக்கும், சென். ஜோன்ஸ் கல்லூரிக்குமிடையிலான 115ஆவது வடக்கின் பெரும் சமரின் தமது முதலாவது இனிங்ஸில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 167 ஓட்டங்களை சென். ஜோன்ஸ் பெற்றுள்ளது.

இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற யாழ். மத்தி, சென். ஜோன்ஸை முதலில் துடுப்பெடுத்தாடப் பணித்திருந்தது.

துடுப்பாட்டத்தில், ஹரீசன் 41, அன்டன் அபிஷேக் 40 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில், கவிதர்சன், விதுசன் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

இந்நிலையில் தமது முதலாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடி வரும் யாழ். மத்தி, நேற்றைய முதல் நாள் முடிவில் விக்கெட் இழப்பின்றி ஆறு ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

# மூன்றாம் ஆண்டு நினைவுகூரல்

2019 ஏப்ரல் 21ஆம் திகதி உயிர்த்த ஞாயிறு தினத்தன்று இடம்பெற்ற தாக்குதல்களில் உயிரிழந்தவர்களை நினைவு கூர்ந்து, நாடளாவிய ரீதியிலுள்ள தேவாலயங்களிலும் பொதுஇடங்களிலும் நேற்று (21) விசேட பிரார்த்தனைகள், நினைவுகூரல் நிகழ்வுகள் நடைபெற்றன.

## நீதி கோரும் பிரார்த்தனை







மட்டக்களப்பு, கல்லடிப் பாலத்துக்கருகில் அமைக்கப்பட்டுள்ள நினைவுத் தூபி அருகில், ஆத்மசாந்தி நினைவுப் பிரார்த்தனையும் ஈஸ்ரர் குண்டு தாக்குதலுக்கு நீதி கோரிய கவனயீர்ப்புப் போராட்டமும் நேற்று வியாழக்கிழமை (21) காலை நடைபெற்றது.

கே.எல்.ரி. யுதாஜித்

## மௌன அஞ்சலியும் கவனயீர்ப்பு போராட்டமும்

ஈஸ்டர் தின தற்கொலை குண்டு தாக்குதலில் உயிரிழந்தவர்களின் 3ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு, மலையகத்தின் பல இடங்களிலும் இடம்பெற்றது.

நுவரெலியாவில் புனித சவேரியார் தேவாலயத்தில் உயிரிழந்தவர்களின் ஆத்மசாந்தி வேண்டி விசேட ஆராதனை நடைபெற்றது. இதையடுத்து, தேவாலய வளாகத்தில் அருட்தந்தை சுகத் ரோகன தலைமையில் காலை 8.45 மணிக்கு தேவாலய மணி ஓசை எழுப்பப்பட்டு, மெழுகுவர்த்தி ஏற்றி மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது. அத்துடன், தற்கொலை குண்டு தாக்குதல் சம்பவம் தொடர்பில் நீதி வேண்டும் எனக் கோரி கவனயீர்ப்பு போராட்டமும் முன்னெடுக்கப்பட்டது. இதன்போது எதிர்ப்பு வாசகங்கள் எழுதிய பதாகைகளை ஏந்தி அமைதியான முறையில் தமது எதிர்ப்பை வெளியிட்டனர்.

எஸ். கணேசன்









## நினைவு கூரும் பிரார்த்தனை

உயிர்த்தஞாயிறு குண்டுத் தாக்குதல்களில் கொல்லப்பட்டவர்களை நினைவுகூரும் பிரார்த்தனையும் ஆராதனையும் மட்டக்களப்பு சியோன் தேவாலயத்தில் நேற்று (21) வியாழக்கிழமை காலை நடைபெற்றது.

கே.எல்.ரி.யுதாஜித்







## அஞ்சலி

உயிர்த்த ஞாயிறு குண்டு வெடிப்பில் உயிரிழந்தவர்களுக்கு யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் அஞ்சலி செலுத்தப்பட்டது. யாழ். பல்கலை வளாகத்துக்குள் மாணவர்களின் ஏற்பாட்டில் நேற்றைய தினம் வியாழக்கிழமை மதியம் 12 மணியளவில் அஞ்சலி நிகழ்வு நடத்தப்பட்டது.

எம். றொசாந்த்










## நினைவு ஆராதனை

2019 ஏப்ரல் 21 உயிர்த்த ஞாயிறு தற்கொலை குண்டுத் தாக்குதலில் கொல்லப்பட்டவர்களை நினைவு கூரும் வகையிலான கூட்டுத் திருப்பலியும் சர்வமதத் தலைவர்களின் கொல்லப்பட்டவர்களை நினைவுகூர்தல் நிகழ்வும் கொழும்பு, கொச்சிக்கடை புனித அந்தோனியார் திருத்தலத்தில் பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தலைமையில் நேற்று (21) நடைபெற்றது.

கீத் ஸ்ரீ டிமெல்



























விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டால் வெள்ளிக்கிழமை, 22 ஏப்ரல் 2022, இல. 08, ஹுணுபிட்டி குறுக்கு வீதி, கொழும்பு-02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.